
எண்சுவை எண்பது
துரை. மாணிக்கம்
வி. சின்னையா

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

**நூலக நூல்கள்**

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

# எண்சுவை எண்பது

(தனித்தமிழ்ப் பாவியம்)

துரை-மாணிக்கம்
(பெருஞ்சித்திரன்)

# எண்சுவை எண்பது

(தனித்தமிழ்ப் பாவியம்)

முதற் பதிப்பு: க. சிலை தி. பி. 2000 (16-12-1969)

1000 படிகள்

உரிமை ஆசிரியர்க்கு:

**விலை ஒன்றரை உருபா.**

(இந் நூலையோ, நூற்பகுதியையோ எவ்வகையானும்
பயன்படுத்திக்கொள்ள ஆசிரியர் ஒப்புதல் பெறுக)

தென்மொழி மின் அச்சகம்,
கடலூர்-1.



## முன்னுரை.

இலக்கியப் படைப்பார்வமே படிப்பார்வத்திற்குத் துணை நிற்கும். அதுபோல் இலக்கியப் படிப்பார்வமே அதன் படைப்பார்வத்திற்கும் துணைசெய்யும். இந்த இரண்டு ஆர்வங்களும் தமிழ்க் கழகக் காலங்களில் மிக்கோங்கியிருந்து. இடைக்காலத்தில் குன்றியிருந்து பின் தறிகெட்டு, இக்காலத்தே பெரிதும் சிதைந்து போயின. வாழ்க்கையை மாந்தர் கனிபோல் சுவைத்தல் வேண்டும்; காய்போல் பேசிக்கொள்ளுதல் வேண்டும்; இலைமறைகாய் போல் எழுதிக் காட்டுதல் வேண்டும். இக்காலத்து இவ்வரை முறைகள் தலைகீழாய் மாறிப்போயின என்னலாம். இன்று வாழ்வின் சுவைநலன்கள் காய்போல் சுவைக்கப் படுகின்றன. இலைமறைகாய்போல் பேசிக்கொள்ளப் படுகின்றன; கனிபோல் எழுதிக் காட்டப்பெறுகின்றன. இத்துய்ப்பு முறைகள் என்று மாறுபட்டனவோ அன்றே. இலக்கியம் தடம்புரண்டு போனது. அதனால் மாந்தரின் மனவளம் தடைப்பட்டது; ஈடுபாடு கடுமையுற்றது; மீமிசை மாந்தத் தன்மை கற்பனை என்று ஒதுக்கப் பெற்றது.

இந்நிலைகள் எவ்வாறேனும் திருத்தப் பெறுதல்-முடிந்தால் அடியோடு மாற்றப்படுதல் வேண்டும். அப்பொழுதுதான் இலக்கிய வளர்ச்சி மீண்டும் தமிழகத்தில் ஊற்றெடுக்கும். அதன் உணர்வு இற்றைத் தமிழ் இளைஞர்களிடத்தும் தமிழன்பர்களிடத்தும் ஓரளவு பரவி வருகின்றது என்று சொல்லலாம். அவ்வுணர்வுத் தலையெடுப்பால் இன்று ஓரளவு சில நல்ல இலக்கியங்கள் தமிழில் தோன்றி வருகின்றன. ஆனால் அவை அத்தனையும் மொழிச்செப்பம் பற்றிக் கருத்துச் செலுத்துவதாகத் தெரியவில்லை.

ஒரு மொழியின் இலக்கிய வளமை அதனுள் ஆளப்பெறும் மொழியமைப்பைப்பொறுத்தே அறிஞர்களால் மதிக்கப்பெறும். இடைக்கால இலக்கியங்கள், கழக இலக்கியங்களைப்போல் உயர்வுபெருமைக்கு மொழியில் அவை கொண்ட கட்டுக்குலைவும் கரணியமாகும். ஆயிரக்கணக்கான உரைநடை இலக்கியங்களும் கதை இலக்கியங்களும் இன்று புற்றீசல்கள் போல் தோற்ற மெடுப்பினும், அவை மக்கள் உள்ளத்தைப் பற்றிக் கொண்டு நெடிது வாழாமைக்கு அவற்றின் மொழிச்சிதர்வே தலையாய பொருட்டாகும் என்பதை அறிஞர் எண்ணியுணர்வாராக.

இந்நூல் இலக்கியப் புதுமை மிஃிர எழுதப் பெற்றதாகும். வீழ்ந்துபோன தமிழிலக்கியப் பெருமையைத் தூக்கி நிறுத்தும் முயற்சியில் இஃது ஒருதுளி. அன்பர்கள் பேணிக் கொள்வாராக.

இந்நூல் நெய்வேலி, திருவாட்டி. ஆண்டாள் திருமாறன் அவர்களால் வெளியிடப் பெறுகின்றது. தனித்தமிழ் நூற்களை வெளியிடும் அவர் ஆர்வத்தைப் பெரிதும் ஊக்குவதாகும் இது. பல்வகை இடர்ப்பாடுகளையும் பொருட்படுத்தாது இந்நூல் வெளியீட்டிலேயே முழுக்கவனம் செலுத்திய வெளியீட்டாளர்க்கு என் நன்றி. குறுகிய காலத்தில் இது வெளிவர ஒத்துழைத்த அச்சக அன்பர்களுக்கும், அழகிய ஓவியம் வரைந்து நூலை அழகு செய்த தென்மொழி ஓவியர் திரு. வி. சின்னையாவிற்கும் நம் நன்றியும் பாராட்டும்.

கடலூர்–க
சிலை. க தி. பி, 2000
16—12—69

அன்பன்,

**துரை-மா.**

## படையல்.

**பாவேந் தர்எனும் பாரதி தாசனார்**
*நாவேந்தி வந்த நற்றமிழ் அமிழ்தம்*
*செத்துக் கிடந்த செந்தமிழ் மரபைக்*
*புத்துருக் கொடுத்துப் புதுக்கிய பொழுதில்*
**எண்சுவை எண்பது** *எனுமிவ் விலக்கியம்*
*பண்சுவை மணமும் பரப்பிய தாகலின்*
*எவரடித் துரைக்கினும் இணையிலா,*
*அவரடிக் கிதுவோர் அணிமலர் ஆகுமே!*



# எண்சுவை எண்பது.

## நுழைவாய்

சுவை என்பது இனிமை எனப் பொருள்படுமெனினும், நாவின் ஊறுணர்வையே சுவை என்று பொதுப்படக் கூறுவர். அறிவால் அறிந்து சுவைப்பதே கற்றூர்க்குப் பேரின்பம் பயக்க வல்லது. பொருளை உண்டு மகிழ்தல் நாச்சுவையின் பொது விலக்கணம்; பொருளை உன்னி மகிழ்தல் அறிவுச் சுவையின் தனி இலக்கணம். உண்ணும் பொருள் இடம், காலம், நிலைகடவாதது; அப்பொழுதைக் கப்பொழுதே உண்டு, சுவைத்து, மறப்பது நாச்சுவையின் நிகழ்ச்சி முறை. அறிவுச்சுவை அவ்வாறன்றி எண்ணும் பொழுதெல்லாம் பொருள் விரிவுணர்ந்து, அதனொடு ஒன்றிச் சுவைப்பது. நாச்சுவை கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, இனிப்பு, புளிப்பு என ஆறு ஆகும். அறிவுச் சுவை,

நகையே, அழுகை, இளிவரல், மருட்கை,
அச்சம், பெருமிதம், வெகுளி, உவகையென்
றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப.

(தொல்-பொருள்-மெய்-251)

இவற்றுள் அழுகையை அவலம், அருள் என்று இரண்டு படுத்தி ஒன்பதாகக் கூறுவாரு முளர். அழுகை என்பது பொதுப்பட வருந் துதல் என்றும், அவலம் என்பது தன் துன்பங்கண்டு வருந்துதல்

என்றும், அருள் என்பது பிற துன்பங்கண்டு இரங்கி வருந்துதல் என்றும் பொருள் கொள்வர். இனி, அருள் (சமநிலை)எனும் சுவை பெரும்பாலும் முக நெகிழ்ச்சியாலே காட்டப்படுதலான் அதனை நாடகத்திற்கே உரியதென்பர். எவ்வாற்றானும் முப்பத்திரண்டு மெய்ப்பாட்டுப் பொருளையும் பதினாறாக்கி, அவற்றையும் ஒன்றினுள்ளொன்றடக்கி முழுமைச்சுவை எட்டென மொழிந்தனர். இந்த எண்சுவைகளையும் வடநூலார் முறையே ஆசியம், கருணை, பீபத்சம் அல்லது குற்சிதம், அற்புதம் அல்லது அதிசயம், பயானகம், வீரியம், இரௌத்திரம், சிருங்காரம் எனக் கூறுவர்.

இச்சிறு நூலுள் வரும் பாடல்களெல்லாந் தாய் கூற்றாக அமைந்திருப்பன. ஒரு தாய் தன் மகளைப்பற்றி எண்ணுகின்ற எண்ணங்களை எண்வகையாக்கி, எட்டுச் சுவைகளையும் உணர்த்துவன. பாடல்கள் முழுவதும் செப்பலோசையுடைய வெண்பா யாப்பில் சிந்தியன் முறைப்படி இனிமைச்சொற்களில் விளைந்தனவாகலின், தமிழின்பம் வேண்டுவார் தள்ளாமற் கொள்ளுவர் என்பது நம் கருத்தாகும்.

இடைக்காலத்துத் தமிழ் குன்றியமைக்கும், தமிழ் மக்கள் தன்னுணர்வின்றி அடிமைப்பட்டு வீழ்ந்தமைக்கும், ஈண்டுத் தமிழை மேயவரும் இந்தியெனும் கடாவை வெருட்டப் பாடுகள் பல படுகின்றமைக்கும், தலையாய காரணம் என்னவெனில், சோம்பல் கருதியும், மேனாட்டுப் போலிப் பகட்டுக்கு வளைந்தும், தமிழ் இலக்கியப் பயிற்சியை விலக்கி வந்தமையே ஆகும். தூய தமிழ் நூல் என்னில் மறவாமல் துய்க்க வேண்டும் என்ற அவா பற்றியே இதனைக் கூறுகின்றேம்.

இனி, எட்டுச் சுவைகளும் கதைபற்றியும், தொடர் பற்றியும், மறம் அல்லது பெருமிதம், மருட்கை அல்லது வியப்பு, அச்சம், அழுகை அல்லது அவலம், இளிவரல் அல்லது இழிவு, வெகுளி அல்லது சினம், உவகை, நகை என முறைமை மாற்றியமைக்கப் பட்டன.

## நூலுள் வரும் சுவை நலன்கள்.

1. மறம்:

தன் மகள் ஒருத்திக்கு ஏற்ற கணவன் இத்தகையவனே என்றும், அவ்வாறல்லாதான் அவளை மணம்பேச வருதல் கூடாதென்றும், அவள் தாய் பெருமிதந் தோன்றப் பேசுகின்றாள்; இதுவே மறம்.

கல்வி, தறுகண், இசைமை, கொடை எனும் நான்வகைப் பெருமித மெய்ப்பாடுகளும் ஈண்டுக் காட்டப்பட்டன. தன் மகளுக்கு வாய்ப்பவன் கற்றவனாதல் வேண்டும் என்பதுள் கல்வியும், அவ்வாறல்லாதான் உறவினனெனினும், உரியவனெனினும் அவளை அடைய இயலாது என்பதுள்–தறுகணும், மறுவறக் கற்றார்க்கீயும் பெண்ணின் பேரழகும், இளமை நலமும் கூறியதுள் இசைமையும், பெருஞ் செல்வமாகிய தன் ஒரேயொரு மகளைப் பிறர்க்குக் கொடுக்க இசைவது பற்றிக் கூறுமிடத்துக் கொடையும் கூறப்பட்டிருப்பதைக் கண்டு தெளிக. இவற்றுள் கல்வி முதலியன பிறருடைமைகளாகக் காட்டப் பட்டுள்ளனவே, இதில் தான் மறங்கூறிப் பெருமிதப் படுவதில் யாதுள தெனில், பிறர் கல்வி வேண்டல், தன் கல்விச் சிறப்பை உணர்த்துமாதலின் மறம் ஆண்டுமுள்ளதாம் என்க. இவ்வாறே பிறவற்றையும் கொள்க

2. வியப்பு:

அவ்வாறு மறம் பேசிய தாய், தன் மகளின் முன்னை இருப்புக்கும், பருவம் வந்துற்ற பின்னைச் சிறப்புக்கும் உள்ள வேறுபாட்டினை விருப்பமொடு வியந்தது வியப்பு.

புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் எனும் நான்குவகை மருட்கை மெய்ப்பாடுகளும் விரிக்கப்பட்டிருக்கின்றன.

பருவம் அணைந்தபின்னைத் தன் மகளுடைய மேனியின் பொலிவு பேசுங்கால் உற்ற புதுமையும், அவள் மணப்பருவம் உற்றதால் தனக்கு மேவும் பெருமையும், முன்னைச் சிறுபெண்ணாயிருந்தவள் ஈண்டு இளமை கொழிக்கும் பருவப் பெண்ணாயினள் என்பதுள் அவள் சிறுமையும், இம்மாறுபாடுகளால் விளையும் நிகழ்ச்சி மொழியுங்கால் ஆக்கமும் தோன்றின வென்க.

3. அச்சம்:

அங்ஙன் வியந்த தாயினைவிட்டு, மகள் அவட்குகந்த ஒருவன் பின் போனதை எண்ணித், தனக்குற்ற பழி நினைந்தும் அவர் சென்ற வழி நினைந்தும் அஞ்சுதல் அச்சம்.

அணங்கு, விலங்கு, கள்வர், இறை எனும் நால்வகை அச்ச மெய்ப்பாடுகளுள், தீண்டி வருத்தும் தாக்கணங்கு என்பது வலி மனம் கொள்ளார் அச்சமேற்பட்டுப் பொய்ம்மையாகச் சமைத்துக் கொண்டதாகலின் அணங்கு விடப்பட்டது. விலங்குக் கஞ்சலும், கள்வர்க் கஞ்சலும், இறையவர்க் கஞ்சலும் விட்டு, இக்காலம் வன் கருவிக் காலமாகையான், அவற்றிற் கஞ்சலும் பொருத்தம் என்ன லாம். எவ்வாற்றானும் அஞ்சுதல் அச்சம் எனும் இலக்கணம் பற்றித் தன் மகள் தனிவழிச் சென்றது குறித்தும், அவருக்கு வந்துறும் தீமைகுறித்தும், தனக்கு மேவிய பழி குறித்தும் அஞ்சுதல் அச்சமாயிற்றென்க.

4. அழுகை:

அப்படி அஞ்சிய தாய் உணவுறக்கமின்றி மகள்பற்றி எண்ணிக் கிடப்பது அவலம்.

இளிவு, இழவு, அசைவு, வறுமை எனும் நால்வகை அழுகை மெய்ப்பாடுகளும் கூறப்பட்டுள்ளன. மகள் பிறனொடு சென்றதால் வந்துற்ற இழிவுக்கு அஞ்சியதில் இளிவும், இழத்தற்கரிய செல்வ மாகிய மகளை இழந்ததிலும், மகிழ்வு இறந்துபட்டதினுள் இழவும் முன்னிருந்த அறநிலைகெட்டுத் தீநிலையுற்றதால் அசைவும், மகள் இழப்புக் காரணமாய் உண்ணாமை, உறங்காமை, முதலிய கூறி வெறுமனே கிடத்தலைக்காட்டலால், வறுமையும் கூறப்பட்டன என்க.

5, இழிவு:

அவலங் கொண்ட தாயின்முன் அவள் மகள்பற்றி ஊரார் பேசி யது இழிவு.

மூப்பு, பிணி, வருத்தம், மென்மை எனும் நால்வகை இழிவு மெய்ப்பாடுகளுள் தாயின் மூப்புக் காலத்தே மகள் தனக்கீந்த துயர் கூறுங்கால் மூப்பும், அவளின் உளப்பிணியும், மெய்வருத்தமும் உட்

பட அவற்றைத் தாளா எளியோள் எனச் கூறுங்கால் மென்மையும் கூறப்பட்டன.

6. சினம்:

ஊரார் இழித்துப் பேசிய தாய் முன்னர், வேற்றூர் போய் மணந்த மகளும், மருகனும் வந்தவுடன் விளைந்தது சினம். உறுப் பறை, குடிகோள், அலை, கொலை எனும் நால்வகை வெகுளல் மெய்ப் பாடுகளுள், அறங்காத்து, அல்லவை கடிந்து, உறுப்புக் குறைத்தல் அரசர்க்குரியதாகையால் ஈண்டுவிடப்பட்டது. தன் மகள் தனக்கே கேடு செய்தாள் ஆகலின் தாய்க்கு வந்த சினம் கூறுங்கால் குடி கோளும், கோல் கொண்டலைத்தற்குச் சொல் கொண்டே சலும், தன்மக ளின் அறிவும், புகழும் கொன றுரைத்தலால் கொலையும் கூறப்பட்டன.

7. உவகை:

சினம் இயல்பாற் குறுகி மறைந்து மகள்பால் அன்பு படர உண் டாகியது உவகை என்க.

செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு எனும் நால்வகை உவகை மெய்ப்பாடுகளுள், தாய் தன் மகளிடம் அணி மணி பூண்டு உவகை கொடுத்துக் கொண்டாள் என்பதுள் செல்வ நுகர்ச்சியும், திறம்படப்பேசி அவளொடு மகிழ்ந்தாள் என்பதுள் புலனும், மகளை யும், மருமகனையும் ஒன்றுபடுத்திக் கூறியவற்றால் புணர்வு நிமித்த மும், பூவொடும் புனலொடும் இடைப்படுத்தி மகிழ்தலால் விளையாட் டும் குறிப்பிடலாயின.

8. நகை:

உவகை மேவிய தாய், மகளின் வாழ்க்கை கண்டு கொழித்தது நகையாம்.

எள்ளல், இளமை, பேதைமை, மடன் எனும் நால்வகை நகை மெய்ப்பாடுகளுள், எள்ளல் இழிவின்கண் அடங்கியதால் ஈண்டுவிடப் பட்டது. மகள் இளமைச் செயல்கண்டு நகைத்தலும், அவள் தன் கணவனொடு பேசி மகிழ்ந்து பழகுங்கால் இடைப்பட்ட பேதைமை கண்டு நகைத்தலும், தன் மகளுக்குச் சிற்சில போழ்து படுகின்ற மடன் கண்டு நகைத்தலும் கூறப்பட்டன வென்க.

இனி, ஒரு சுவை இயலுள் மறு சுவைக்கான ஓரிரண்டு நிகழ்ச்சி கள் விரவி வருவதான பாடல்களும் உண்டு எனினும் பெரும்பான்மை கருதுமிடதது முழுவாகாதென்க.



# 1. மறம்.

## (தாய் கூற்று)

உற்றார்க் குரியளல்லள்; ஓங்குயர்நூல் செப்பமுறக்
கற்றார் வியக்கும் கலைவிளக்குஞ் செந்தமிழ்நாப்
பெற்றார்க் குரியளெம் பெண். (1)

---

(விரிவுரை)

எண்சுவை என்பது—எட்டுச் சுவைகளையும் பொதுளிய என்பது பாடல்கள். சுவைக்குப் பத்துமேனி என்பது பாடல்களாம்.

தாய் தன் அரும்பெறல் மகட்குரிய நல்லான் ஒருவனைத்தேட விரும்புவளாதலின், வருவார் போவாரிடம் எத்தகையவன் அவட்கு ஏற்றவன் என்பதாகத் தருக்கிக் கூறுவதே மறம் எனலாயிற்று.

(1) உற்றார்க்குரியளல்லள்—என்றது அவளை அடைய உறவு வழியில் வருவார் பலர் எனினும், அவள் அவர்க்கு உரியவள் ஆகாள் என்பது பற்றி. மணம்பேச வருவார், முதலில் உறவினர் என்ற முறைமை பற்றியே பேசுவர் ஆகலின், அதனை அவர்கள் விடல் வேண்டும் என்னும் கருத்தமையக் கூறினள் என்க. இதனால் உறவு அல்லாதவர்களும் அவளை மணக்கலாம் என்றபடி.

செந்தமிழ் நாப் பெற்றார்க் குரியள் எம்பெண்—என்றது அவ்வாறு உறவு தவிர்த்த மற்றார்க்குத் தகுதி கூறப்பட்டது. வெறும் நாப் பெற்றார் என்பதல்லாது, கலை விளக்கின்ற செந்தமிழ் பேசும் நா வென்றதும், வெறுங் கலை என்பதல்லாது கற்றார் வியக்கும் கலை என்றதும், வெறுங் கற்றார் என்பதல்லாது, செப்பமுறக்

கத்துகடல் சூழுகின்ற கன்னித் தமிழகத்துப்
புத்திளைஞீர்! நும்மிலொரு போதான் எவனவனே
முத்துவன்மொய் கூந்தன் முகம். (2)

வாயுண்ணல் நற்றமிழே வாழ்ந்துபடல் செந்தமிழ்க்கே
ஏயுமுளம் அற்றை இளந்தமிழ்க்கே என்பான்மேல்
மேயுமிவர் கண்ணெனு மீன். (3)

செந்தமிழில் வல்லாற்கே செம்பொருளைக் கண்டாற்கே
அந்தமிழ்க்கே வாழ்வை அமைத்தாற்கே எந்நாளுஞ்
சொந்தமிவள் செங்கனிவாய்ச் சொல். (4)

ஆய்ந்தார் புடைசூழ ஆய கலைமுற்றும்
வாய்ந்தார் மருங்கமர வண்டமிழில் நன்னெஞ்சந்
தோய்ந்தார்க் குரியதிவள் தோள். (5)

---

கற்றார் என்றதும், அவ்வாறு செப்பமுறக் கற்றிருக்க வேண்டியவை ஓங்குயர்ந்த நூல்களையே என்றதும் தருக்கிய, ஏற்ற எண்ணம் உடையாள் என்று காட்டித் தலைப்பொடு பொருத்தற்கும் வேண்டி என்க. இப்பாட்டால் தன் மகள் இன்னார்க்கே உரியவளாகுவள் என்ற பொதுத்திறம் விளங்கிற்று.

2) இப்பாடல் பலர் முன் மொழிதல்.

போதான் எவன் அவனே முத்துவன் —என்றது அவனே முத்த உரியவன் ஆவான் என்பதுபற்றி. முத்தல்-முத்தமிடல். போதான்-தகுதியுடையான். போதல் தகுதியுடையதாதல்.

3) வாயுண்ணல் என்பது தமிழை மொழிதல் மட்டுமன்றிக் கற்றலுமாம் என்பான் வேண்டி; வாழ்ந்துபடல்-வாழ்ந்து இறத்தல். என்பான்மேல் மேயும் இவள் கண்ணெனு மீன்-என்றது அவன் தவிரப் பிறர்மேல் மேயாதென்பதால்.

4) தமிழில் வல்லானுதலும், அதனுட் பொதிந்த மெய்ம்மைப் பொருள்களை ஆய்ந்து கண்டானுதலும், அவ்வாறு கண்டு அத் தமிழ்க்கெனவே தன் வாழ்வை அமைத்துக் கொண்டானுதலும் வேண்டும் என்றபடி.

5) தமிழில் நன்னெஞ்சந் தோய்ந்தாரே இவள் தோளையுந் தோய உரியவராகுவர் என்றாள்.

வணங்குவாய்ச் செந்தமிழில் வல்லான் எவனே
பிணங்குசெங் கைதள்ளிப் பின்கூடும் பேதைச்
சுணங்குமுலைத் தாலியவன் சொத்து. (6)

சற்றும் தயங்குவதில்! சார்ந்தாரை எண்ணுவதில்;
முற்றும் உளந்தோயும் முத்தமிழில் வல்லானைப்
பற்றுமென் பாவையிளங் கை. (7)

மயங்காத் தமிழ்க்கல்வி மாந்துபுகழ் மேவி
வயங்கும் இளையானை வஞ்சியிடை தோய
முயங்கும் மகள்மென் முலை. (8)

தட்டுவிளை யாச்செந்நா தாழாமல் தண்டமிழ்ப்பா
கொட்டுதமிழ்க் கோவையிளங் காளையற்கே எஞ்ஞான்றுங்
கிட்டுமிவள் மார்புக் கிடை. (9)

---

6) பிணங்கு செங்கை தள்ளிப் பின்கூடும் ] பேதை—என்றது ஊடலும் கூடலும் ஒருங்குடன் அளிப்பாள் என்று அவள் காதற்றிறம் உரைத்தது. சுணங்கு—தேமல். சுணங்கு முலைத்தாலி என்றது அதன்மேற் புரளுந்தாலி என்பதனுல்

7) பற்றும் என் பாவையிளங் கை—என்றது அவளும் விரும்பிப் பற்றுவள் என்றபடி. இளங்கை என்றது மகளின் இளமை தோன்றக்குறித்தது. சார்ந்தாரை எண்ணுவதில் என்றது அதற்காக அவள் பிறர்க்கு அஞ்சாள் எனக் குறித்தல் வேண்டி.

8) மயங்காத் தமிழ்க்கல்வி ஐயமறக் கற்றல்; 'கற்க கசடற' என்ருராகலின். அவ்வாறு கற்றலோடமையாது, புகழ்மேவி இருத்தல் வேண்டும் என்பது 'மாந்துபுகழ் மேவி வயங்கும்' என்பதால் விளக்கப்பட்டது.

வயங்கும் இளையான் என்றது அவ்வாறு இருப்போரிலும் இளமையுடையானையே உரிமையாக்குவள் என்பான் வேண்டி. இளையானை வஞ்சியிடை தோய முயங்கும்—என்றதால் தன் மகளும் அன்னவனையே விரும்புவள் என்று குறிப்புணர்த்தலாயிற்று.

9) தட்டு—தடை. தாழல் தன் நிலையிற் கீழிறங்கல். தமிழ்க்கோவை என்றது சொல், செயல் முதவிய கருவி வினைகளும், உள்ளம்,

தணிவடையாச் செந்நாவின் தண்டமிழிநூல் கற்றுப்
பணிவுடைய பாவலற்குப் பாவையவள் செம்பொன்
மணிவயிறு தாங்கும் மகன்.

---

அறிவு முதலிய காரண வினைகளும் பொருந்திய கோவை என்ற படி. அக் கோவை முற்றுந் தமிழால் ஆயது என்பது பெறப் படும்.

10) தண்டமிழ் நூல் கற்றுப் பணிவுடைய பாவலன்—என்றது கற்ற லினால் உண்டாகும் செருக்கற்றிருந்து, பணிவுடையனுயிருத் தல் வேண்டும் என்று உரைப்பான் வேண்டி. 'ஆன்றவிந்தடங் கிய சான்றோன்' என்றாரகலின்.

மணிவயிறு தாங்கும் மகன்—என்றதால் தாய் தன் மகளின் மகன் (பெயரன்) மேல்கொண்ட உள்ளக் கிடக்கை அறியலா யிற்று.





## உ. வியப்பு-

என்னை இகழ்வளிலள்; ஈண்டிகழ்வள்; மற்றியான்
அன்னை எனும் நினைவும் ஆ!மறந்தாள்; அன்பிறந்தாள்;
பின்னையெவன் கண்டாள் பிணை? (1)

---

பெண் வளர்ந்து பருவம் எய்திய ஞான்று முன்னைக்கும், பின்னைக்கும் உள்ள ஏற்ற மாற்றங்கள் கண்டு, உருவும், உள்ளமும் செயலும் வியந்து விருப்பின்மேல் பெருமை படக் கூறியது வியப்பு எனலாயிற்று.

1) என்னை இகழ்வள் இலள் என்றது முன்னை இருந்த நிலை. தன் தாயின் கால்சுற்றும் மகவாயிருந்து, மடிப்படுக்குங் குறுநடைக் குழவியாய் வளர்ந்து, முப்போதும் பிரியாமலிருந்த ஞான்றை அவள் தாயை இகழ்ந்தவளல்லள் என்பது கூறி, ஈண்டிகழ்வள் –என்ருள். ஈண்டுப் பெண்மைப் பருவம் எய்திய பின்றை ஆண் துணை வேண்டல் பற்றிப் பெண்துணை இகழ்வள் என்று மொழியலாயினள்.

அன்னை எனும் நினைவும் ஆ! மறந்தாள்–மறவா மகளை மறந்தாள் என்றல், முன்னில்லா நிலை ஈண்டுவந்த வியப்பு பற்றி.

ஆ! மறந்தாள்-வியப்பு. மறவாதவள் மறந்தாள் என்றலின்.

துணையாயிருந்த பெண்மையை இகழ்வதும், அன்னையாயிருந்தவளை மறந்ததும், எல்லார்பாலும் காட்டற்குரிய அன்பை

உண்ணுவதில்; முன்போல் உறங்குவதில்! உற்றவரை
எண்ணுவதில்; கூன்பிறையொன் றேந்துநுதன் மாங்குவளைக்
கண்ணிலெவன் விட்டான் கணை? (2)

முனிவிலள்முன்; இற்றை முறுவலிலள்; முன்போற்
கனிவிலள் செங் காந்தளிளங் கைமேல் அடித்துத்
தனியிலெவன் சொன்னான் தடை? (3)

---

யும் இறந்தாள் என்றதும், அவள் கொண்ட மாற்றங்கள், அன்பைக்கொட்டி வளர்க்கும் அன்னையை நீக்கி அவள் வேறு யாரை அவளுக்குத் துணையாகக் கொண்டாள் என்பது வியப்பு.

எவன் கண்டாள் பிணை? வேறு ஒரு பெண்ணும் தனக்கீடு ஆகாள்; பெண்ணொருத்தியை விரும்புவதானால் பெண்களுள் எல்லா வகையினும் அன்னையே அருந்துணையாயிருக்க, வேறு பெண்ணை அவள் விரும்புதல் இருக்காது என்றெண்ணிய தாய், அவள் விரும்பியது ஆண் துணையையே என்றும், அவ்வாறு அவள் உள்ளங் கவர்ந்தவன் தாய்க்கீடான அன்புடையவனாக இருத்தல் வேண்டும் என்றும் கொண்டே பிணைஎவன் கண்டாள் என்றாள் என்க.

2) உண்ணல், உறங்கல் உற்றவரை எண்ணல் முதலியன புறச் செயல்களாதலின் அவற்றின்பாற்பட்ட மாற்றங்கள் எளிதில் உணர்தலாயின. இந்த மாற்றங்கட்குக் காரணமான அவள் பருவ நோய்க்கு அவள் கண்களே காரணமாதல் பற்றி, 'கண்ணில் எவன்விட்டான் கணை?' என்று கூறினள். தான் காத்து வளர்க்கும் அவளை, அருகில் வந்து எவனும் விரும்பாமல், தொலைவிலிருந்தே பார்வையால் கவர்ந்திருக்க வேண்டும் என்பதை உய்த்துணர்ந்த தாய் 'கணையைக் கண்ணில் விட்டான்' என்றாள் என்க.

3) தான் வேற்றான் மேல் நினைவாயிருத்தலால் அதற்குப் புறம்பான பொருள் செயல்மேல் முனிவு ஏற்படுதலும் உள்ளம் தெளிவற்றுப் பருவ எண்ணங்கள் மொய்க்குமாதலின் முறுவல் தோன்றாததும், தான்கொண்டான் பற்றிக் கருதி இன்புறற்குப்

தாய்த்தொடையிற் றுஞ்சும் தனிமயிலித் தண்தரையில்
பாய்த் துறந்து பூங்குழலே பாயாப் படுத்துறங்க
வாய்த்ததென்ன பால்நாறும் வாய்க்கு? (4)

தந்தை பிரிவிலள்; தானிற்க நாணுவளீண்
டெந்தைதாய் நன்சொற் கிணங்குவளில்; மற்றெவரால்
முந்தைநிலை மாறினளெம் முன்? (5)

---

பிறர் பேச்சு தடைசெயல்பற்றி, அவர்பால் கனிவிழப்பள் என்றலும், அகச் செய்கைகளாம். முன்பு முனிவு செய்யாதவள் ஈண்டு முனிந்தாள். முன்பு நகைத்தவள் ஈண்டு முறுவலுங் காட்டாள். முன்பு கனிவுடையளாய் இருந்தவள் ஈண்டுக் கனிவிழந்தாள். 'இவ்வாறு முன்பு இருந்த அகநலன்களைச் செய்ய வேண்டா என்று தடை செய்தவன் யாவன்?' என்று வியக்கின்ருள்.

தனியிலெவன் சொன்னுன் தடை என்றது எல்லாமிருக்க எவனும் வந்து அவளிடம் பேசுதல் நடவாதாகலின், அவ்வாறு தடை கூறியிருந்தால் அவன் தனிமையிலேயே கூறியிருக்க வேண்டுமென்பதும் அறிவிப்பான் வேண்டி.

4) தாய்த்தொடையில் துஞ்சுவள்—என்பது தாய் அவள்மேல்வைத்த அன்பும் மகள் இளமையானவள் என்பதும் புலப்படல் வேண்டி என்க.

தனி மயில்-வேறு மகள் இல்லையாதலால்.

பால் நாறும் வாய்க்கு: இளமை தோன்றக் கூறியது. 'எவரும் என்றும் இளையவர் அவர் தாய்க்கே' என்றலினுல்.

5) தந்தையை முன் பிரிந்தறியாள்; ஈண்டோ அவர் முன் நிற்கவும் நாணுவள்; பெற்ருேரின் நன் சொற்கும் இற்றை இணங்குவள் இலள். முன்பிருந்ததுபோல் இல்லாமல் எம் முன்னிலையில் மட்டும் மாறுபடுகின்ற இவ்வேறுபாடு எவரால் நிகழ்த்தப் பெறுகின்றது என்று வியக்கின்ருள்.

துவர்கனிவாய்க் கோதை தனிப்போகாள்; கங்குற்
சுவர்நாடி வல்கதவத் தாழ்திறந்து நாளும்
எவர்நாடிப் போவாள் இவள்? (6)

கோட்டுப்பூச் சூடிக் குழல்புனைந்து, முன்மாலை
கூட்டுப் புறவெனவே காத்தென்னே? யான்காலை
காட்டுப்பூக் கண்ட கருத்து! (7)

நெற்றிப் பிறையில் உகிர்ப்பிறைகள்; தாழ்ந்திருக்கும்
கற்றைக் குழல்நெளிவிற் கான்கொன்றை! செங்கண்ணுள்
பெற்றதெவன்? யாண்டெவன்றன் பால்? (8)

மடியிருந்தாள் அன்றை; மணல்வீடு கட்டிக்
குடியிருந்தாள் நேற்று; குழலவிழ யார்பால்
துடியிடையாள் கண்டாள் துயர்? (9)

6) துவர்–சிவப்பு. தனிப்போகாள்–எங்கும் தனித்துப்போகாள். இப்படிப்பட்டவள் இக்காலை கங்குலில் சுவர்வழிச்சென்று, வலிந்த கதவின் தாழ்திறந்து செல்லும் பழக்கமுடையளாய் இருக்கின்றாள்.

நாளும்–என்றது பழக்கம் தோன்ற நின்றது.

அங்ஙன் இவள் நாடிப்போவது எவரை என்று வியந்தபடி.

7) முன் மாலை தான் கோட்டுப்பூ வைந்திருக்க, மறுநாட் காலை வேறு காட்டுப் பூவைச் சூடியிருந்தாள்; இதன் கருத்து வியப்பு குறித்தது. தாய் மகளைப் பேணிய முறையைக் கூட்டுப் புறவெனக் காத்து என்பதாற் காட்டப் பெற்றது. என்னே என்றது அவ்வாறு காத்தும் பயனில்லை என்றவாறு. கோட்டுப்பூ-மகிழம் முதலிய மரத்தில் மலரும் பூ.

8) செங்கண்ணுள்–இரவு கண்விழித்துச் செவ்வரி படர்ந்த கண் கண்டு கூறியது.

உகிர்–நகம். நெற்றியில் உகிர் அழுத்தமும், கற்றைக் குழலில் கான்கொன்றையும் இவள் பெற்றது எப்படி? எங்கு? எவன்பால்? என்றது.

9) பருவத்துயர் கொள்ளும்படி இவள் பெரியவளல்லள்; சிறியவளே! என்பதை மடியிருந்த நிகழ்வு வைத்துக் கூறியதால் காண்க.

கண்டதெது கூர்ங்கண்? களித்ததெது வள்ளைக்கா
துண்டதெது செவ்வாய்? உணர்ந்ததெது தன்னெஞ்சம்?
கொண்டதெதிம் முல்லைக் கொடி? (10)

10) ஒருவனைத் தொலைவிலிருந்தக்கால் முதலிற் கண்டது கண் ஆகலின் 'கண்டதெது கண்' என்றாள். இனி எல்லாரும் இருக்கவும் கரவு கொண்டு நோக்கித் தன் கருத்தைக் கூறியிருத்தலால், வெறுங்கண் என்னாது 'கூர்ங் கண்' என்றாள்.

அவனைக் கண்ணுற்கண்டு கவர்ந்த பின்றை அருகு நெருங்கி, அவன் மொழி கேட்டிருப்பாளாகையால் அடுத்து 'என்ன கேட்டது அவள் கா'தென்றாள். வெறுவாய்க் கேளாமல் கேட்டுக்களித்தலால் 'களித்த தெது வள்ளைக்காது' என்றாள். கண்டு, கேட்ட பின்றை உண்ணல் முறைமையாகலின் இளமை நலம் உண்ண வேட்ட அவள் 'செவ்வாய் எதனை உண்டது?' என்று வியந்தாள்.

இனிக், கண்டு, கேட்டு, உண்ட பின்னை உயிர்த்தல் எனும் மெய் நிகழ்வு பற்றியும், அழகு கண்டு, வாய்மொழி கேட்டு, இளமை நலம் உண்ட பின்னர் அவனே அவள் நெஞ்சிற் குடியேறிய வல்லானுதல் வேண்டும் என்றும் கூறுவான் வேண்டியும், 'உணர்ந்தது எது தன் நெஞ்சம்' என்றாள் எனக் கொள்க.

இனி, இந்நலங்களெல்லாம் பெற்ற பின்னை ஒருவனைச் சுற்றிப் படரத்தக்க இக்கொடி போன்றவள், அவனையே கொழு கொம்பாகக் கொண்டு விட்டாளோ என்று ஐயமும் வியப்பும் தோன்ற கொண்ட தெதிம் முல்லைக் கொடி?' என்றாள். வெறுங் கொடி என்னாது 'முல்லைக்கொடி' என்றதால் கற்புணர்த்தப் பெற்றது. முல்லை—கற்பு.





## 3. அச்சம்.

உருவங் குலைந்தற்ருல்! உள்ளமலைந் தற்ருல்!
இருகண் சிவந்தற்ருல்; ஏந்துமிடி என்னே?
பருவம் அணைந்ததவள் பாங்கு! (1)

குடையேந்து நல்லீர்! கொடுவழிகண் டீரோ;
நடையேந்து பூங்கால். நலிவுடற் செங்கட்
படையேந்து பாவையிப் பால்? (2)

---

### 3. அச்சம்

உள்ளங் கொண்ட ஒருவன்பின், அன்னையையும், சுற்றத்தையும் மறந்து சென்ற மகளை, அவள் போன வழி நினைந்தும், அதனுல் மேவும் பழி நினைந்தும் அஞ்சுதல் அச்சம் எனலாயிற்று.

1) அன்னையைப் பிரியுமுன் மகள் அதுபற்றி மிகவும் எண்ணி இடர்ப்படுவாளாதலின், உருவம் குலைதலும், உள்ளம் அலைதலும், கண்கள் உறக்கமின்றிச் சிவத்தலும் இயல்பாயின. இவை கண்ட அன்னை இவற்றிற்குப் பருவம் காரணமாமோ என்று கருதுவாளாகி, பருவம் அணைந்ததவள் பாங்கு எனக்கூறி அமைவாளாயினள்.

இப்பாட்டு பிரிதற்கு முன் தோன்றிய நிமித்தம் என்க.

2) சென்ருன் பின் சென்ருளைத் தேடி அன்னையுஞ் சென்ருள்; வழியில் எதிர்வரும் பெரியோரை வினவியது.

பழியறியீர் காட்டீரோ? பாரறியாள்; மேவும்
இழிவறியாள்; பெற்ருேர் இடும்பறியாா்; வாழ்க்கை
வழியறியாள் போன வழி (3)

குடையேந்து நல்லீர் என்றது, கடுக்கோடைக்கால மாதலின் வெயில் காரணம் பற்றி ஏந்திய குடையினராக வந்தாரை விளித்தது. இனித் தன் மகளை ஒருவனேடு போகக் கண்டிருப்பின் அதைக் கரவாது கூறவேண்டுமென வேட்டாள், நல்லீர் என விளித்தலாயினள்.

கொடுவழி கண்டீரோ—என்றது அவர் போன வழிக்கொடுமை தோன்றக் கூறியது.

நடையேந்து பூங்கால்—என்றது, இதற்குமுன் ஏற்காத நடையை இன்று ஏந்தினள் என்பது பற்றி. பூங்கால் என்றது அதன் ஆற்ருமை தோன்ற மென்மை கூறியது.

கொடுவழி என்று முன்கூறிப் பூங்கால் என்று பின் கூறியது உன்னற்பாலது. நலிவுடல்—என்றது குடையேந்து வெயிற் கொடுமைக்கு ஆற்ரு உடல் என்பது பற்றி.

செங்கட்படை ஏந்து பாவை—என்றது அவட்குத் துணையாக நின்றது அவளின் கண்களாகிய படை ஆதல் பற்றியாம். அக் கண்களும் இப்பால் ஒருவர்க்கு அடிமையானதைக் குறிப்பால் கூறினள் என்க.

3) நல்லவர்களைக் 'கண்டீரோ' என்று வினவிய அன்னையிடம் அன்னுர் கண்டோம் என மொழிய, பின்னுமவரைக் காட்டீரோ வென்று கூறுவதாகும் இப்பாடல்.

காட்டீரோ என்ற பின் வினவினுல் 'கண்டோம்' என்பது உய்த்துணர்தலாயிற்று

பழியறியீர்! என்றது-பழியறியாத சான்ருேராக இருத்தல் பற்றியும், பொய் கூறுதலும் பழியே ஆதலினுல், அது கூற முன் வாரார் என்றல் பற்றியும் என்க.

பாரறியாள்—என்றது உலகப் பெருக்கத்தையும், அவள் தனிமையையும் நினைவு கூர்ந்து.

பிறக்குங்கொல் உள்ளப் பெருந்துணிவு! பெற்ரேர்
துறக்குங்கொல்! கண்துஞ்சாத் தொல்லேமகிழ் தாயை,
மறக்குங்கொல் பெற்ற மகள்? (4)

---

மேவும் இழிவறியாள்-என்றது, அவள் சென்றதால் மேவும் இழிவையும் உணரவியலாத சிறியாள் என்பது பற்றி.

பெற்ரேர் இடும்பறியாள்-என்றது பெற்றவர்பால் கொண்ட அன்பினும், அவள் கொண்டான்பால் கொண்ட மிகையான அன்பிஞல் இவர் துன்பத்தை உணராள் என்றபடி.

வாழ்க்கை வழியறியாள் போனவழி-என்றது வாழவேண்டிய முறைமை யறியாது, கொடுங்கானம் அடைந்தனள் என்பது பற்றியும், அவ்வாறு போனதும் மேற்கொண்டு செல்ல வழியறியாது போயினள் என்பது பற்றியுமாம்.

4) இனி வழிகண்டு சென்று மகளேக் காணுத தாய் நொந்து கூறியது இப்பாடல் என்க.

பெருந்துணிவு-என்றது தன்னுடைய இயலாமை பற்றியும், தன்னினும் அன்னுள் துணிவு கொண்டாள் என்பது பற்றியுமாம். பெற்றவரைத் துறத்தற்கும், பெற்ரேரிலும் சிறந்ததாயை மறத்தற்கும் அத்துணிவு முன்னின்றதால் பெருந்துணிவு என்ருள். கண்துஞ்சாத் தொல்லே மகிழ்தாய் என்றது தாயாகிய தான் அவளேப் பெற்றுப் பேணிக்காத்துக் களித்தலில், கண் துஞ்சாததும், தொல்லேகளே மகிழ்வெனக் கருதி இருந்ததும் விளங்கக் கூறியவாறு. இத்துணேப் பெருமையுடையவளே மறத்தல் அத்துணே எளியதன்று என்று உணர்த்தி, அவ்வாறு மறத்தற்குத் துணிவு வேண்டும் என்று நிறுத்தி, அத் துணிவும் பெருந்துணிவாதல் வேண்டும் என்றிறுத்தி, அப் பெருந்துணிவும் அச் சிறியவள்பால் பிறந்ததே என்று முடித்துக் கூறினளென்க.

கலைமான் அடைவறியாக் கள்ளிநிழல் தேடி
அலைகான் அடைந்தவனே டாற்றுங்கொல்; ஆற்ருள்
முலைமேன் வளர்ந்த முலை. (5)

மாகைக் களிறு மரஞ்சாய்ப்ப, மண்டுபெடைக்
கூகை யலறக் குலைநடுங்கும்; என்னேவென்
தோகைக்கு வந்த துணிவு. (6)

---

5) இனி அவள் போனவழி பற்றிய அச்சம் உரைக்கப் புகுந்தனள் என்க. கலைமான் அடைவு அறியாமல் காய்ந்த கள்ளியின் நிழல் தேடி அலையும் பெற்றி வாய்ந்த கானம் அவள் சென்றது என்பாள்.

ஈண்டுக் கலைமான் என்றது தன் மகளையும், கள்ளிநிழல் தேடி அலையும் கானம் என்றது அவள் போன வழியையும், அடைவு அறியாமல் என்பது மணந்து சிறத்தலாகிய இல்லறப் பெருமையை அறியாமல் என்பதுவும் குறிப்பால் உணர்த்தப் பெற்றவென்க. ஆற்ருள்—பொறுக்காள்.

முலைமேன் வளர்ந்த முலை-என்றது தான் வளர்த்துக் காத்த வகையினையும், தன் மகள் இளமையையும் கூறிய தென்க. ஒருத்தி உறுப்பு நலன்களைக் கூறுதல், தாய் ஒருத்திக்கே அமையும் ஆதலின், அவள் உறுப்பெதிர் வைத்துக் கூறுதல் ஈண்டுக் குற்றமாகாது என்க.

6) மா—கரிய—கை—துதிக்கை. களிறு தன் கையால் வீழ்த்தியது தோன்ற கைக்களிறு என்று கூறிய தென்க.

மண்டுபெடைக் கூகை-அண்டிய பெடைக் கூகை. மடம் பொருந்திய பெடைக் கூகை எனினும் பொருந்தும்.

மகளை வேற்றூர் அழைத்துச் சென்றவனைக், கிளையை முறிக்கும் யானைக்கும், அவனொடு போகித் துயருறும் மகளை மண்டு பெடைக்கும் குறிப்புக் காட்டிக் கூறினள் என்க. இல்லறப் பெருமையாகிய கிளையைப் பற்றி வீழ்த்தி, அதனுட் பொருந்

இருங்கானின் நச்சுக் கிரைப்பட்டாள் எம்பெண்;
மருக்கொசிந்து சாயும் மடநல்லாய், ஆற்றேன்
கருங்குழலாள் வந்த கனவு! (7)

என்னடி பேதை இழைப்பாளோ இன்னுதான்
முன்னடி வைக்க முரணடி இலாமற்
பின்னடி வைக்கும் பிழை. (8)

---

தியபெடைக்கூகையை அலறியஞ்சும்படி அவன் செய்தனன் என்று கொள்க. அறிவற்ற மகளின் செயல் குறிக்க மண்டு பெடை என்றாள் என்க.

கூகை அலறக் குலைநடுங்கும்-என்றது தன் மகளின் எளிய நெஞ்சம் குறித்தது.

7) அவள் வழி எண்ணி அஞ்சியுறங்கிய தாய், கனவு நிலை உணர்த்தியது. மருங்கொசிந்து சாயும் மடநல்லாய்-என்றது மகடூஉ முன்னிலை. மகளின் தோழிபால் தாய் உரைத்தது இப் பாடல் என்க.

இருங்கான் நச்சுக்கு இரைப்பட்டாள் எம் பெண்-என்றது அவள் கண்ட கனவாம்.

8) என்னடிபேதை- என்றது மகடூஉ முன்னிலை.

இன்னுதான்- என்றது மகள் கொண்டவனை; பழி நாணுப் பெற்றியன் ஆதலின் இன்னுதான் என்றாள்.

முன்னடி வைக்க முரணடியின்றிப் பின்னடி வைத்தலைப் பிழையென்றது, இன்னுதான் பின் போயினதுபற்றி என்க. இது மிகுந்த இழிவாம். இனியான் பின் அவ்வாறு போதல் மிகு சிறப்பாயிற்று; இனியான் ஒருவன் அவ்வாறு கூட்டிச் செல்லான் என்பதைக் குறிப்பால் உணர்த்தினள்.

அஞ்சுவல்யான் ஆயிழைக்கே! அஞ்சேன் அவள்பிழைக்கே!
கொஞ்சி, தலைநுகரும் கூன்ருய்க்கே, யான்பெற்ற
வஞ்சி யிழைத்த வகை! (9)

நடுங்கான் கொடுவாழ்வோ நண்ணினள்; நற்ருய்
கெடுங்காண் எனும்நினைவு முன்னினள்! கோதை
படுங்காண்யான் அஞ்சும் பழிக்கு. (10)

---

9) அவள் துயரம் எண்ணுங்கால அஞ்சுகின்றேன். அவள் பிழையினை உன்னுங்கால அஞ்சா தொழிகின்றேன். வஞ்சி இழைத்தது இந்த வகைதான்—என்று கூட்டுக.

10) நடுங்கான் கொடு வாழ்வை அடைந்ததற்கும், நற்ருய் துன்புறுவள் என்று எண்ணுத துன்பத்திற்கும், அவள் படுந்தண்டம் பழியே ஆதலின், படுங்காண் அஞ்சும் பழிக்கு என்ருள். நடுக்கான் என்பது எதுகை நோக்கி மெலிந்தது.

இப்பழிக்குத் தான் மட்டுமன்றி யானும் அஞ்சுவேன் என்று குறிக்க 'யான் அஞ்சும் பழிக்கு' என்ருள்.





# 4. அவலம்.

கள்ளே கனிவாய்! கயலே மணிவிழி
எள்ளே மலர்நாசி! ஏகினள்; அவள்வளர்க்கும்
புள்ளே அவள்வழியிற் போ! (1)

---

## 4. அவலம்.

மகள் பிரிவால் நோயுற்று, உள்ளங்கவன்ற தாய் படுந் துன்பங்கூறியது அவலம் என்க. அவலம்–துன்பம்!

1) மகள் பற்றி எண்ணியுழன்ற தாய், அவள் விரும்பிய பொருள்களைக் காணுங்கால் வருந்துவள் என்பது இயல்பாதலின், அவளொடு மிகுவாய்ப் பழகிய அவள் அன்பொடு வளர்த்த கிள்ளை முதலிய உயிர்களைப் பார்க்குந்தொறும் வருத்தம் நிகழ்வதாயிற்று. அவள் வளர்த்த கிளி, அவள் பயிற்றிய சொற்களைச் சொல்லுங்கால், அதுகேட்டு அவள் நினைவு கொழுந்துவிட்டெரிதலும், அக்கிள்ளை அவ்வாறு அடிக்கடி நினைவூட்டி வருத்துதல் தாளாது அதனிடம் உரைத்ததாக முன் கூறப்பட்டது.

கனிவாய் கள்ளே என்றும், மணிவிழி கயலே என்றும் நாசி எள் மலரே என்றும் கூட்டுக. மகளின் அழகு நலன்களை எண்ணினாள் என்க. “இவ்வாறான தன் மகளே போயினள்; அது பற்றிக் கவல்கின்றேன்; அவ்வருத்தம் மிகைப்படுமாறு நீ தொல்லை தராதிருக்க, நீயும் அவள் வழியிலேயே போ” என்று கிள்ளையிடம்கூறியவாறு, புள்ளே அவள் வழியிற் போ-என்றாள்.

அவள் வளர்க்கும்- என்றது, இனி யான் வளர்க்க இயலேன் என்பதும், அவளன்றி நீயும் வளராய் என்பதும் தோன்றக் குறித்தது. இது தன் வருத்தம் தீரப், பிற உயிரை வெறுத்தது.

நீலக் குயின்மொழி! நெற்றியே வான்வில்!பூஞ்
சோலைக் குழல்முகில்! சூழுமிளங் காலையிலே
கோலமுனக் குண்டோ குறடு? (2)

பகலிரண்டு; முன்றிரவு; பாலருந்து பூசை!
அகல்நெடுங்கண் இல்லை; அருந்து,கனி கிள்ளை!
மகள்வாராள் புல்லுண்பாய் மான்! (3)

---

2) நீலக்குயில் பேசுவது போன்ற மொழி என்றும், வான்வில் போன்ற நெற்றி யென்றும், பூஞ்சோலை மேவும் முகில் போன்ற குழல் என்றும் உவமைத் தொகைத் தொடராகக் கொள்க. தன் மகள் இளங்காலையிலே கூட்டிப் பெருக்கிக் கோலமிடுந் தன்மையள் என்பதும், இனி அவ்வகை அழகின்றி வெறுநிலமாய், என் போற்கிடப்பை என்றும், குறட்டை நோக்கிக் கூறினுள் என்க.

3) பகலிரண்டு மூன்றிரவு- என்றது இரண்டு முழு நாட்களும் ஓர் இரவும் ஆகும். இதனுல் மகள் தாயைப் பிரிந்தது முதல்நாள் இரவில் என்பது குறித்தது.

பூசை- பூனை.

வருந்துந்தாய் தன்போல் யாவரும் வருந்துவர் என்று மயங்குவாள் என்பதியற்கையாதலின், தான் உண்ணுதது போலப் பூனை முதலிய உயிரிகளும் உண்ணுதிருக்கு மென்று கருதி உரைத்தாள் என்க. பூசை பாலருந்து என்றும், கிள்ளை கனி அருந்து என்றும், மான் புல்லுண்பாய் என்றுங் கொண்டு கூட்டுக. இனி மகள் அன்பு தோன்றப் பூனையையும், அவள் பேச்சுதோன்றக் கிளியையும் அவள் மருட்சி தோன்ற மானினையும் கூறினள் என்க. இனித்,தன் மகள் வீட்டில் வளரும் பூனையாயிருந்து, பறந்து செல்லும் கிளியாகி, காட்டில் மேயும் மானுயினள் என்றும் முறைமை யடுக்கிக் கூறினள் என்றும் கண்டு மகிழ்க.

'நறுந்தோகை நண்ணுவள் நண்ணிமருங் கொல்கப்
பறந்தோடி நீர்கொணர்வள் பைங்கொடி'யென் றெண்ணல்;
குறுந்தொடிகை தூக்குங் குடம். (4)

நறவணையும் வாய்முத்தம் நாடுவையோ? நாடிச்
சிறகணையும் நற்றுயிலுஞ் சோர்வாயோ? என்றன்
புறவணையும் மாடப் புறவு. (5)

இலைவிரிக்கும் பூங்கை இனியென்று காண்பன்;
தலைவிரிக்கும் மென்விரல்கள் தம்மையெவண் காண்பன்;
கலைவிரிக்குங் கட்படுமோ கண். (6)

---

4) இஃதுஅவள் நீர்கொணருங் குடங்கண்டு கவன்றது. நண்ணுவள் அடைவள்; நெருங்குவள்.

நண்ணுவள் நறுந்தோகை– என்றது அவள் மயில்போல் சாயல் தோன்ற வருதலும், பறந்தோடி மருங்கொல்க நீர் கொணர்வள் பைங்கொடி– என்றது கொடிபோன்ற இடை வருந்தும்படி குடத்தை வைப்பள் என்பதும் புலப்படல் வேண்டி.

எண்ணல்– எதிர்மறை ஏவல் வினைமுற்று– எண்ணுதே. புறத் தோற்றம் இழந்த அன்னை, அகத் தோற்றங் கண்டு மகிழ்வா ளியற்கையின், மயிலும் கொடியும் நினைவுகொண்டாள் என்க. வெறுங்கையால் தூக்கும் குடம் பெருமையிழக்கு மாதலால், குறுந்தொடி யணிந்த கையால் தூக்கும் பெருமைசான்ற குடம் என்றனள்.

5) இஃது அவள் கொஞ்சும் மாடப்புருவை நோக்கிக் கூறியது. புருவை அணைத்து மூத்தந்தருதலும், அவள் மார்பில் அது சிற கணைந்து துயிலலும் இனி இல்லையாதலால், இவை தவிர, மற்ற பயன் தன்னுல் உண்டென்றும் கவன்று கூறியது.

என்றன் புறவணைக்கும் மாடப்புறவு– என்றது. உன்னை எவ் வளவு விருப்போடு அணைப்பாளோ, அந்த விருப்போடு நான் அவளை அணைத்து வளர்த்தேன் என்ற குறிப்புத் தோன்றக் கூறினுள் என்க. நறவணையும் வாய்– தேன் ஊறும் வாய்.

இடிவைத்தாள் நெஞ்சில்! இணைவைத்தாள்! கானிற்
கடிவைத்தாள்; இற்றைநீ ஆர்வைக்கப் பூத்தாய்
கொடிவைத்த முல்லைக் கொடி? (7)

குயில்வந்து கூவாதே! கோதைநடை காட்டிப்
பயில்கூத்து மேவாதே; பாவைநினை வேனோ?
மயில்வளர்த்த பச்சை மயில்! (8)

---

6) தன் மகள் தனக்கு வாழையிலைவிரித்து உணவு படைத்த நிகழ்ச்சியையும், தன் மென்விரல்களால் தன் தலை களைந்த காட்சியையும், அவள் உரையாடி மகிழுங்கால் அவள் கண்கள் விரிக்கின்ற கலை இன்பத்தையும் இனி என்று காண்பது என எண்ணி வருந்தினள் என்க.

வாழையிலை மென்மையாதலின், அதைவிட மென்மையானது அவள்கை எனக்குறிக்கப் பூங்கை என்றாள்; இலையினும் பூ மென்மையாதல் பற்றி.

கலைவிரிக்கும் கட்படுமோ கண்– கலையை விரிக்கின்ற அவள் கண், தன் கண்முன் எதிர்ப்படுமோ?

7) இஃது, அவள் வைத்து வளர்த்த முல்லைக் கொடியைக் கண்டு கூறியது.

இணை வைத்தாள்– தனக்கென்று ஓர் இணையை (துணையை) வைத்துக் கொண்டாள். என்நெஞ்சில் இடியையும் தன் நெஞ்சில் இணையையும் வைத்தாள் என்றபடி.

கானிற் கடிவைத்தாள், இற்றை நீ ஆர்வைக்கப் பூத்தாய் முல்லைக்கொடி– என்றது, அவள் முல்லை மலர்ந்து மணக்கும் காட்டிற்கே சென்றாள் இனி நீ இங்குப் பூத்தலிற் பயனில்லை என்றபடி. இனி என்மகள் நின்னை வளர்த்தது போல் நான் அவளை வளர்த்தேன்; அவள் மலர்ந்தபின் மாற்றான் பின் போயினள். நீயும் பூத்தல் செய்யாதே. வேறு எவராகிலும் கவர்ந்து செல்வர் என்று கூறினள் என்க.

கொடிவைத்தது– என்றது தன்மகள் வைத்து வளர்த்தது என்பதுணர்த்த.

மறந்தாள் மகளென்னை; மற்றியென் எண்ணந்
துறந்தாள்; இனியென்று, தோகைசெவி கேட்கும்
'இறந்தாணும் அன்னையிவண்' என்று, (9)
வேட்டாளோ? கேடில்லை; வேற்றானை விட்டெண்ண
மாட்டாளோ? கேடில்லை; மற்றுமணம் பற்றியெமைக்
கேட்டாளோ? இல்லை;யது கேடு! (10)

---

8) கூவுங்குயில் அவள் போற் குரலுடைய தாகலின் அதனைக் கூவாதே என்றாள். மயில் தன் தோகையின் நடைகாட்டிப் பயிலும் கூத்து, அவளை நினைவு படுத்துதலால், அதனைக் கூத்து மேவாதே என்றாள்.

மயில் வளர்த்த– மயில்போன்ற என்மகள் வளர்த்த.

9) மறவாவிடில், தன்னைத்துறவாள் என்றதால் முதற்கண் மறந்தாள் மகளென்னை என்றாள். என்னைத் துறந்தாலும் மீண்டுமொருகால் வந்தாலும் வருவாள்; ஆனால் என் எண்ணத்தையே துறந்தாள் என்று குறிக்க என் எண்ணந்துறந்தாள் என்றாள். இனி, 'இறந்தாள் நும் அன்னை இவண்' என்ற சொல் ஒன்று தான் அவள் செவி கேட்கவுளது என்று கூட்டுக. அவ்வாறு அவள் கேட்பினும் உளத்தே வருந்தாள் என்பது குறிக்க 'செவியால்மட்டும்' கேட்பாள் என்றாள். அதுவும் அவள் விரும்பிக் கேளாது அவள் செவிமட்டும் தானேகேட்கும் என்றுங் குறிக்க, செவி கேட்கும் என்றாள்.

10) வேட்டாள்–விரும்பினாள்.

அவள் தனக்கொரு காதலனை விரும்பினாளென்பது தவறில்லை– அஃது இயல்பாதலின்.

அவள் விரும்பிய புதியவனை விட்டு, மற்றவரை எண்ண மாட்டாளென்பதுந் தவறில்லை–அவனையே எண்ணி, இருந்து, அவன் பாலே கொண்டு, கொடுத்து வாழலே இல்லறமாதலின். ஆனால் மணம்பற்றித் தமையொரு சொல் கேளாது விட்டாளே அது

தான் கேடு—அதனுல் அவள் வீட்டைவிட்டு வெளிச் செல்லல் நிகழ்ந்ததும், துன்பம் வந்துற்றதும், பழிமேவுற்றதும் நேர்ந் தன வாகலின் அது கேடு என்ருள்.

விரும்புவது அவள் உள்ளத்திற்குள்ளேயே அடங்கும் என்ப தால் அது தவறில்லே என்பதும், அவள் தம்மை எண்ணுதது, தன்னுள்ளத்தும், அவளுள்ளத்துமே அடங்கு மாதலின் அதுவும் தவறில்லே என்பதும், அவள் தன்னேக் கேளாது வெளிப்போந்த தால் ஊரார் உள்ளமெல்லாம் அச்செய்தி படர்ந்தது என்பதால் அதுவே கேடு என்பதும் கொண்டாள் என்க.

கேட்டாளோ? இல்லே; அது கேடு—என்றதால் அவள் கேட் டிருந்தால், தான் மறுக்கப்போவதில்லே என்று தன் அருள் நெஞ்சம் புலப்படுமாறு கூறினுள் என்றும் கொள்க.





## 5. இழிவு

பொன்வயிறு வந்தாள்; புறம்போனுள்! தான்பிறந்த
புன்வயிறு தீவைத்தாள்! போகுங்கொல், போகாதே
என்வயிறு பட்ட இழிவு. (1)

---

### 5. இழிவு

மேல் நிலையினின்று கீழ்நிலைக்கு இழிந்தது 'இழிவு' ஆம். இழிதல்-கீழ் இறங்குதல்.

உயர்ந்த குடிப்பெருமை, தன்மகளால் தாழ்ந்ததே என்றும், அதனுல் ஊரார் கொள்ளும் இழிவும், இதனைத் தான் தாங்குவதும் கூறியது இழிவு என்க.

1) பொன் வயிறு வந்தாள்.—அவளைப் பெற்றெடுத்த தன் வயிற்றைப் பொன் வயிறு என்றதால், அவள் பிறந்தக்கால் தான் பெருமை கொண்டதைக் கூறினுள். புன்வயிறு தீ வைத்தாள்—என்றது அவள் புறம்போன பின் அதே பொன் வயிறு புன் வயிருனது என்று குறிப்புக் காட்டியபடி. புன்வயிறு—புன்மை வயிறு. புன்மை-புல்தன்மை-இழிந்த தன்மை. வயிறு பொன் வயிருயிருந்தது புன் வயிருனது இழிவு. பொன் வயிறு அவள் போனதால் புன் வயிருகவும், அதனுல் ஊரார் பேசுகின்ற இழிவு அப் புன் வயிற்றுக்குத் தீ வைத்தது போல ஆனதும், அத் தீயும் அவள் மகள் காரணமாக வைக்கப்பட்டதால், அவளே தீ வைத்தாள் எனவும் கூறினள். இனித் தீப்பட்ட வயிறு வடுக் கொண்டு மாருததாகலின் போகாதே என் வயிறு பட்ட இழிவென்னும் வடு என்ருள்.

எற்றுக்குப் பேசுவீர்? இன்னுது தூற்றுவீர்?
புற்றுக்குப் பாலூற்றல் போலுமே, என்வயிறு
பெற்றதொரு பேதை;யிலெ பெண். (2)

பெண்ணை வளர்த்தவள்யான்; பேதையவள் மாங்குவளைக்
கண்ணை அடைப்பவரார்? கள்ளியவள் நெஞ்சத்துப்
பண்ணை அடைப்பவரார் பார்த்து? (3)

---

2) இப்பாடல் பலர் பால் முன்னிலை.

'எதன் பொருட்டு நீங்கள் இழித்துப் பேசுதல் வேண்டும். இன்னுத சொற்களால் தூற்றல் வேண்டும். புற்றுக்குப் பாலூற்றல் போல் அவளை யான் பெற்றேன்; வளர்த்தேன்; பேணினேன். அவளோ தன் நச்சுத் தன்மையைக் காட்டினள். இஃது என் குற்றமோ?' என்றபடி இழிவு தடுத்தாள் என்க. தன் வயிற்றைப் புற்றென்று இழித்துக் கூறியதும், அதில் தோன்றிய அவளைப் பாம்பென்று கூருதொழிந்ததும் ஒரு புடை உருவகம். அவளைப் பாம்பெனக் கூறுதற்கும் அஞ்சினள் என்றபடி. இனி என் வயிறு பெற்றது ஒரு பேதை; இலெ பெண்—என்றது அவள் பாம்பானுலும் ஒரு பேதைப் பாம்பு—பெண் இல்லைஎன்றவாறு. அவள் நல்ல பாம்பாக இருப்பின் அவளால் தான் இறந்திருக்க வேண்டும் என்றதும், அதுவன்றித் தான் இறவாமல் துன்புற வேண்டியிருத்தலால் அவளைப் பாம்பிலும் பேதை என்ருள் என்க. அவளை நீங்கள் பெண் என்று கருதி இழிவுகூற வேண்டுவதில்லை என மறுத்தாள் என்பதாகும்.

3) 'பெண்ணை வளர்க்கத்தான் இயலும். அவள் பிறரைப் பாரா வண்ணம் கண்ணை அடைக்க இயலுமோ?'—என்றற்குக் கண்ணை அடைப்பவரார்—என்ருள். சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் என்ருராகலின். இனித்தானன்றி வேறுயாரும் அடைக்க வியலாது என வுணர்த்தவே ஆர் அடைப்பவர் எனப் பொதுப் படப் பேசினள் என்க. மேலும் அக்கண்ணை அடைக்கமுடியாத படி, அஃது அழகு பொருந்திய கண் என்று விளக்க, 'மாங்குவளைக் கண்' என்ருள். முன்னேரிடத்துக் கலெ விரிக்கும் கண்

சாற்றுகின்றீர் ஏதமிற்றை; சாயனடை வாய்ந்தழகைப்
போற்றுகின்றீர் அற்றை! புறம்போகில் அவ்வாயால்
தூற்றுகின்றீர் தோகையவள் தாய்! (4)

நீடாது நீற்கும் நெடும்பொழுது! நல்லுறவோர்
தேடாது நிற்பர்! தெரிவைமுகங் காண்டற்கோ
ஓடாது, நிற்கும் உயிர்! (5)

---

என்றது கருதற்பாலது. இத்தகைய அழகு வாய்ந்த கண்ணை ஆராலும் அடைத்தற் கியலாது. அவ்வாறு அடைப்பினும், அவள் நெஞ்சத்தில் நடமிடுகின்ற பண்ணை யாரால் அடைக்க இயலும் என்று கூறவேண்டி, நெஞ்சத்துப் பண்ணை அடைப்பவ ரார் பார்த்து என்றாள்.

ஆனால் இவ்வாறு யாருந் தடுக்க முடியாமல் அவள் தன் நெஞ்சத்தில் காதல் பண்ணை இசைக்க விட்டிருந்தாள். ஆகை யின் அவளைக் கள்ளி என்கின்றாள்.

இது, தன்னால் மட்டுமன்றி வேறு யாராலும் இதுபோன்ற நிகழ்ச்சிகளைத் தடுக்க முடியாது என்று உலக வியல்பு கூறி இழிவு மறுத்தாள் என்க.

4) ஏதம்–குற்றம். அன்று அவளைப் போற்றினீர். 'இன்று அவள் மேல் குற்றம் சாற்றுகின்றீர். அதோடு அவள் போனதற்காக அவள் தாயாகிய என்னையும் தூற்றுகின்றீர்' என்று கொள்க. அன்று அவளைப் போற்றிக் கூறியதைவிட இன்று அவளைத் தூற்றிக் கூறியதே தன்னால் தாங்கற்கரியது என்றதால், சாற்றுகின்றீர் ஏதம் இற்றை என்று முதற்கண் கூறினாள் என்க.

எவ்வாயால் புகழ்ந்தீரோ அவ்வாயால் இகழ்ந்தீர் என்றாள். இஃது இழிவு நேரின் விளைவு என்னும் என்றது காட்டியபடி.

5) இத்தகைய இழிவு கேட்டுக் கவல்கின்றேன். பொழுதும் நீடிக் கொண்டிருக்கின்றது. நல்ல உறவினர்கள் தேடிக் கொண்டிருக் கின்றனர். என் உயிர்மட்டும் அவளை மீட்டுமொரு முறை காண் டற்கு ஓடாமல் இருக்கின்றது–என்றாள்.

நல்லாரும் போற்ற நடந்தாளே! நாணமிலாப்
பொல்லாருந் தூற்றப் புறம்போனாள்! பூவையவட்
கெல்லாருஞ் சொல்வர் இழிவு. (6)

ஏட்டி!ஓ!ஓ! என்சொற்றாய்? என்மகளை ஏதிலவன்
கூட்டியே குற்றான் குறைகண்டி! கோதையயோ
பூட்டிமு டாதவோர் புள். (7)

---

உறவினர்களில் நல்லவரை இழிவு வந்தபோதே காணற்கிய லும் என்பது இயல்பாம். என்னை? 'கேட்டினும் உண்டோர் உறுதி. கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்' என்றாராகலின். இற்றை இவளுக்கு இரங்கி இழிவு களையும் உறவினர்களை 'நல்ல உறவினர்கள்' என்றாள்.

நல் உறவினர்கள் தேடிக் கொணரும் அத் தெரிவையின் முகம் காண வேண்டியே இவ்வுயிர் நிற்கும் என்றபடி. இழிவு தாங்காது உயிர் விடாததற்குக்காரணம் தாய்மையன்பே என்று உணர்த்தினள் என்க.

6) அன்று அவளைப் போற்றியது நல்லவர்கள். இன்று பொல்லா ரும் தூற்றும்படி புறம் போனாள். அதனால் எல்லாரும் இழிவு கூறுகின்றனர் என்று கவல்கின்றாள். நல்லவர் போற்றியதே பெருமை என்று கொண்டது, மகள் பெருமைக்கு உயர்வு கற் பித்தது. பொல்லாரும் தூற்றியது இழிவு என்றது, அவள் சிறுமைக்கு மிகவும் தாழ்வு காட்டியது. பொல்லாதவர் முன் பெல்லாம் தன்முன் நாணி வராதிருந்து, இன்று இழிவு வந்த போது நாணமின்றித் தன் முன் வந்து, நான் நாணும்படியா கத் தூற்றுகின்றதை நாணமிலாப் பொல்லார்—என்று குறிக் கின்றாள்.

7) இப்பாடல் மகடூஉ முன்னிலை.

தன் மகளை இழித்த ஓர் இளையாளை எதிர்த்து நின்றது. ஏட்டி—ஏன்டி. வலித்தல் விகாரம்.

விழிபிறந்த தின்சொல் விளைந்ததன் றேயோர்
பழிபிறந்த தென்றறியேன்; பாலொழுக்கு பேதைக்
கிழிபிறந்த தன்றை;யிலை இன்று. (8)

பூத்தேடு தொல்லை புரிமோ;தேன் உண்பார்க்கு?
கூத்தாடு வாரறிமோ கூதிர்ப் பெருங்காற்று?
நாத்தூற்ற லுன்னுவளோ நன்கு? (9)

ஓ ஓ-சினங்கொண்டு இழிவு மறுத்தது. "என் மகளைப் பிறன் ஒருவன் கூட்டி ஏகினன் என்று குறை பேசுகின்றாய்' என் கோதை பூட்டி வைத்து மூடப்படாத ஒரு பறவை என்பதை அறி என்றாள், என்பதாம். அவள் காக்கப்படாத பறவை ஆக லின் பறந்து போனாள் என்று விளக்கியும், அவ்வாறின்றி நீ பிறரால் காக்கப்பட்டு வருகின்றமையால், போகாமல் இருக்கின் றாய் என்றுணர்த்தியும் கூறியவாறென்க. இது வந்த இழிவை எதிர்த்து இழிவு காட்டியார்மேல் இழிவு சாற்றியது.

மூடிப்பூட்டாத என்று வராது பூட்டி மூடாத என்றது தொடை முரண்.

8) 'விழி பிறந்தது; இன் சொல் விளைந்தது; அன்றே ஒரு பழி பிறந் தது' என்று அறியேன்.-என்றது இவள் பெண்ணாகப் பிறந்த அன்றே எமக்கு இழிவும் பிறந்தது; அஃதவ்வாறாக 'நான் இன்று பிறந்ததுபோல் வருந்துதல் எற்றுக்கு' என்று இழிவு தேற்றினள் என்றவாறு. பாலொழுகு பேதை என்றது அவள் குழந்தைமைப் பருவத்தை நினைவு கூர்ந்து சொல்லியது.

9) பூவைத் தேடித் தொல்லையுற்றுத் தேனீ சேர்த்த தேனை உண்ப வர், அது பட்ட வருத்தத்தை அறிவாரோ?—
கூதிர்ப் பெருங் காற்றால் குளிரெய்தித் துன்புறுவார் நிலையைக் கூத்தாடுவார் அறிவாரோ?-எடுத்துக்காட்டுவமைகள்.

"இளமைத் தேனை உண்பவளாகிய தன் மகள் அவளைப் பெற் றுப் பேணிய தாயின் வருத்தம் அறிவாளோ? இழிவாகிய குளிர் காற்றால் யான் வருந்துதலை, காதல் கூத்து ஆடுபவளாகிய

தனித்துணே நம்பித் தடம்போனுள்; தாயென்
றெனைத்துணே எண்ணு திடர்செய்தாள்; எற்கோ
இனித்துணே யாகிற் றிழிவு. (10)

---

அவள் அறிவாளோ?''–என்று பொருத்துக. கூத்துப் பார்ப் போர்க்கன்றி ஆடுவோர்க்குக் குளிர்த்துன்பம் இல்லை என்ற வாறு. இவைபோல் நாவால் தூற்றுகின்றதை அவள் உன்னு வாளோ என்றபடி கவன்று, அறியாள் என்று தேறினள் என்க.

தேன் உண்பவர் மயங்கி யிருப்பதும், கூத்தாடுவார் அக்கூத் தின் நடிப்பில் ஒன்றியிருப்பதும் காதல் கொண்ட அவள் நிலைக் குக் காட்டாகும். வேற்றூர் போக முற்படுமுன், தனக்குப் பின் னுல் வருகின்ற அலர் பற்றி ஏதோ சிறிது எண்ணியிருப்பினும் முழுதும் அறியாதவளாகையால் உன்னுவளோ நன்கு என்றுள்.

10) தனித்துணே–என்றது தான் கொண்டவனன்றித், தன் மகட்கு வேறு யாரும் துணேயில்லாதது கருதி.

'எனக்கோ இனி இழிவே: துணேயாகிற்று'–என்றபடி. துணே யாயிருந்த அவள் போனபின் அவளுக்குத் துணேயில்லை. தனக் கும் இழிவன்றி வேறு துணேயில்லை. இனி அவள் வந்தாலன்றி எனக்குத் துணேயாகும் இழிவு நீங்காது என்றுள் என்க.





## 6. சினம்

யாரொருத்தி நீயிவனுர்? யாதுபற்றி யாங்குவந்தீர்?
யாரொருத்தி தன்னையிவண் யாயென்றை? யாங்கேனும்
மோருறைத்த பால்வருமோ முன்? (1)

### 6. சினம்.

வேற்றூர் போய் மணந்த தன் பெண்ணும், அவள் மணவாளனும், அவர் பிரிவால் வருந்தி, இழிவாற் குன்றி, இழப்பால் மனம் கன்றிய தாய் மூன்நிற்ப, அவர்தமை முனிந்து பேசுதல் சினம் என்ருயிற்று.

1) தாய்க்கு மகளாயிருந்தாள், தனக்கொரு கணவனைத் தானே தேடி அவன்பின் சென்ற ஞான்றே, பழி வந்தெய்திய தாய் தான் அவளுக்குத் தாயுமல்லள், அவள் தனக்கு மகளுமல்லள் என்று கொண்டாளாகையால் யாரொருத்தி நீ என்று கூறலாயிற்று. இவன் ஆர் என்றது தன் மகள் மணுளன் பால் நேர்கூற்ருக வினவாது தன் மகளையே யார் இவன் என்று கேட்டபடி.

யாது பற்றி–என்றது என்ன உரிமை பற்றி என்பது. வந்தது மன்றி ஆய் (அன்னுய்) என்று நீ விளித்தது யாரை? என்று சினக்கின்ருள். இத்துணையும் கேட்டுவிட்டுத் தன் மகளின் தகாச் செயலையும், அவள் முன்னிருந்த நிலையின் வேறுபட்டிருப்பதையும் காட்டுவான் வேண்டி, மோருறைத்த பால் முன் வருமோ–என்ருள், என்க. பால் திரிந்து தயிராய பின்றைப் பாலாகுமோ என்றதை, மோர் எனும் அவனெடு கலந்த பாலாகிய இவள் மீண்டும் தூய்மை எய்த முடியுமோ என்பதோடு பொருத்துக. இழிவு நேர்ந்த பின்றை இழிவு துடைத்தல், மோர் கலந்த பாலைத் தனியாகப் பிரித்தல் போலாம் என்றது.

இல்லமுன் நில்லன்மிா்! ஏலாசொற் கூறன்மிர்:
பல்லர்முன் வந்து பழிசெய்யீர்! பாழ்நெஞ்சின்
அல்லல்முன் நில்லாதும் அன்பு. (2)

தீக்கை மலர்க்கையால் தேர்ந்தாய் மடமகளே!
யாக்கை வருத்தும் அழல் வாய் எருத்துப்புண்
காக்கைக் கினிக்குங் கனி. (3)

---

2) நில்லன்மிர்—நில்லாதீர்கள். கூறன்மிர்—கூருதீர்கள். பல்லர் முன் வந்து பழி செய்யீர்—என்றது இழிவு செய்த பின்றை இனியும் பழிசெய்ய வேண்டா என்றபடி. பல்லார் என்பது எதுகை நோக்கி நெடில் குறைந்தது. பாழ் நெஞ்சு-என்றது இவ்வளவு துயர் கொண்டும் மாளாத நெஞ்சு என்றற்காம். இழிவாற்பட்ட துன்பங்கள் முன் தாய்-மகள் என்ற அன்பு எதிர்நில்லா தென்ப தால், அல்லல் முன் நில்லாது உம் அன்பு என்ருள்.

3) தீக்கை மலர்க்கையால் தேர்ந்தாய்—என்றது, தீயவழி மேவுவா னுடைய கையினை; மலர்போல் குளிர்மையும், மென்மையும் கொண்ட நின் கையினுல் பற்றி மணந்தேர்ந்தாய் எனல் வேண்டி. அவ்வாறு செய்தது மடமை யாகலான் மடமகளே என்ருள் என்க. இனித், தன் உள்ளம் கொண்டானின் உள்ளம் பற்றுதல் தீதோ, அன்றி மடமோ என்பார்க்கு, ஏதிலார் பழி யும், தூய்மை மாய்ப்பும் கொண்ட புறம்போய் மணந்தமணம், சான்ருேர் போற்ருத தொன்ருகலின் அது பெருமையற்றதென்க.

அழல்வாய் எருத்துப் புண் காக்கைக்கு இனிக்கும் கனி—என் றது பிறர் நோவறியாது தன் பசிக்கெனவே, அழல் வாயை யுடைய எருத்தின் புண்ணைக் கனியென்று கொத்தி யுண்ணும் காக்கை போலவே, தன் இளமை மணம் வேட்டல் கருதி, தனைப் பெற்ருளின் உளத்தை உணராது அவட்குத் துன்பந்தந்து தான் மகிழ்வது போன்றது என்றற்காம்.

யாக்கை வருத்தும் அழல் வாய்ப்புண்—என்றதால் உள்ளம் மட்டுமன்றி ஊண் உறக்கமின்றி உடலுக்கும் ஏற்பட்ட வருத் தம் என்க. புண்ணைக்கனி என்றது நிறவொற்றுமை கருதி என்றறிக.

மால்விழுந்தாய்; இன்னுன் மனம்விழுந்தாய்; மன்னனென்று
மேல்விழுந்தாய்; எந்நாளும் மேவும் பழிவிழுந்தாய்;
கால்விழுந்தாய், கையிருக்க; காண்! (4)

ஏற்றுக்கொள் என்பீரிங் கெல்லாமு மெ·்தையோ!
ஏற்றுக்கொண் டேனிடும்பை; ஏற்றுக்கொண் டேன்பழியை!
ஏற்றுக்கொண் டேனே இழிவு. (5)

முத்தென்றேன்; சிப்பி! முதலென்றேன், கீழ்க்கடையை!
சொத்தென்றேன்; சொத்தை! சுனேயென்றேன் தீக்கனலே!
வித்தென்றேன் உன்னே விதந்து. (6)

---

4) மால்–மயக்கம்.

மாலுற்று மனங்கழன்று, அவனே மணந்து கொண்ட நின் செய்கையால் எந்நாளும் தீராத பழியெனும் குழியில் விழுந்ததுமன்றி என் காலில்வேறு வந்து விழுந்தாய்–என்பதாம்.

கையிருந்தக்கால் விழுந்தாய்–என்றது, உன்னேக் கைகளால் அணைத்து மகிழும்படி நான் இருக்க, அத்தகைய சிறப்பினேப் பெருது, என் கால்களில் நீ விழுந்து அழும்படியான இழிவைப் பெற்ருய் என்றபடி.

காண்–என்றது, ஈண்டாவது அதன் ஏற்றத் தாழ்வை நீ உணர்ந்து கொள்வாயாக என்றதுமாம்.

இப்பாட்டான் மகள், தாயின் காலில் விழுந்து வருந்திஞள் என்று கூறியபடி.

5) இது பலர் பால் முன்னிலே. மகள்மேல் முனிந்த தாய்நோக்கி 'ஏற்றுக்கொள்' என்ற சான்ருேரை நோக்கிக் கூறியது. அதற்கு, 'நான் முன்பேயே இடும்பை ஏற்றுக்கொண்டேன்; பழியை ஏற்றுக் கொண்டேன்; இழிவை ஏற்றுக்கொண்டேன்' என்றி வருத்தந் தோன்றக் கூறியது.

6) நின்னே முத்தென்று எண்ணியிருந்தேன். வெறுஞ் சிப்பி ஆயினே. என் பெருமையான இல்லறத் தொடரின் முதல் என்று எண்ணியிருந்தேன். நீ என் இல்லறப் பெருமைக்குக் கீழ் இறுதி

சீர்கொட்டி யேற்ருயோ சிற்ருலி? நம்மைப்பேர்
ஊர்தட்டித் தூற்றும் உலகம் உணராளே!
ஆர்கட்டி யேற்ருய் அது? (7)

ஏடா! இவள்சிறுகை ஏற்றழைத்துப் போஞயாந்
தேடாப் புகழ்போக்கித் தேராதார் தூற்றுகின்ற
கூடா இழிவழைத்தாய்; கூற்று! (8)

---

யைக் காட்டினே. நின்னேடு அப்பெருமை குன்றியது. சொத்தைப் பழுதையினே, என் சொத்தென்று எண்ணி இறுமாந்திருந்தேன்; தீ போன்ற கொடியாளேச், சுனேயென்று நினேந்து மகிழ்ந்திருந்தேன்; நம் குடும்பப் பெருமைக்கு விதை என்று உன்னே எண்ணி உவந்திருந்தேன். இப்பொழுது காண். அவ்வுரை விதப்ப உரையானதை' என்ருள் ஆம். விதந்து-மிகப் படக்கூறி.

7) இஃது அவள் அணிந்திருந்த பொற்ருலி நோக்கிக் கூறியது, சிற்ருலி—சிறுதாலி; சிறுமை உடைய தாலி. சீர்கொட்டி யேற்ருயோ—என்றது நம் பெருமைகளே எல்லாம் கொட்டிக்கொடுத்து இச் சிறுமை பொருந்திய தாலியை ஏற்ருயோ?—என்றபடி.

நம்மைப்பேர். ஊர்தட்டித் தூற்றும் உலகம் உணராளோ—என்றது, நாம் மறக்கினும் இவ்வுலகம் நம்மை மறவாமல் நம் பழியைச் சாற்றும் என்றபடி. பழி வந்தது உனக்கு மட்டுமன்று, நம் குடும்பத்திற்கே என்றது விளக்க நம்மைத் தூற்றும் என்ருள். இதுபற்றி நீ யறிய மாட்டாய் எனல் வேண்டி உலகம் உணராளே என்ருள்.

எனேவிட்டுப் பிரிந்துபோய்,என் முன் வந்தது, நான் ஏற்றுக் கொள்வேன் என்பதுணர்ந்தே என்றதும், ஆனுல் நம்மை என்றும் தூற்றும் உலகத்தை நீ உணரவில்லே என்றதும் ஆம்.

8) இதுவரை தன் மகளே ஏசிக்கொண்டிருந்தவள் தன் முன் நின்ற மகள் மணுளனே நோக்கிச் சினந்து கூறியது. தேடாப் புகழ் போக்கி—என்றது பண்டை இருந்த இல்லப் பெருமையைத் துடைத்தாய் என்றபடி.

இல்லிக் குடுவை இருங்கடலைத் தாண்டுமோ?
புல்லிப் புறம்போகும் போக்கிலியோ டேடிபோய்
வல்லிநீ பெற்ருய் வடு? (9)

தேராதார் தூற்றும்-பழம் பெருமையினை ஆய்ந்து, உண்மை உணராதவர் வாய்க்கு வந்தவாறு பேசும்;

கூடா இழிவு அழைத்தாய்-வரக்கூடாத இழிவைத் தாமாகவே வரவழைத்துக் கொண்டாய் என்றபடி.

கூற்று-என்றது உயிரைக் கவ்வி உடலைப் பிணமாக்குதலால். உயிர்போன்ற தேடாப் புகழைப் போக்கித், தூற்றப்படுகின்ற இழிவு பொருந்திய வெற்றுடலாகச் செய்ததனுல் அவனைக் கூற்றுவன் என்ருள். 'ஒழுக்கம் உயிர்' என்ருர் நூலோர். சிறுகை-என்றதால் அறியாத சிறு பெண் என்ருள்.

9) இல்லிக் குடுவை-பொத்தற் குடுக்கை. இல்லிக்குடுவை அகன்று விரிந்த கடலைத் தாண்டும் என்று நினைந்து அதைத் தெப்பமாகக் கொள்வாரோ? கொள்ளார். அதுபோல், புணர்ந்து பெருமை வீழ்த்தி, வேற்றிடம் போகும் போக்கில்லாதவனேடு, நீ போய் உன் பெருமையைத் தொலைத்தாய் என்றபடி

இல்லிக்குடுவை என்றது பெருமையுற்ற புல்லறிவுடையன் என்றற்காம் அவ்வாறல்லான் எனின் அவன் வேற்றூர் கூட்டிப் போவானே என்ருள் என்க.

இருங்கடல்-வாழ்க்கைக்கடல்; துன்ப அலையும், துயரக் காற்றும் வீசுகின்ற கடல், மேலுங்கீழும் புரளும் தன்மைத்தாயது. அவ்வாருள்ள வாழ்க்கையை நடத்த இவன் தகான் என்ருள் என்க.

போக்கிலி-போக்கில்லாதவன் போக வேறு இடமின்றி உன் பின்னுல் என்னிடமே வந்து சேர்ந்தானே என்று குறிப்புக் காட்டினுள் என்க. வல்லி நீ பெற்ருய் வடு என்றது ஆறிய பின்னும், மாருமல் இருந்த இடங்காட்டும் தழும்பு போல், நீ செய்த செய்கை, நாளை மாறினும் உள்ளத்துத் தழும்பாய் வீற்றிருக்கும்

அன்னைச் சினமாறும்! அன்பவள்பா லூறுமதில்
முன்னைக் கனிவிருக்கும்; என்றோ மடமகளே.
பின்னைநீ வந்தையிவன் பின். (10)

என்றபடி. இன்றிருந்த சினம் மாறினும் இழிவு அழுந்திய வடு என்று இருக்கும் என்றாள் என்க.

10) அன்னைச் சினமாறும்–என்றது, பெற்றதாய், தன் பிள்ளைமேற் கொண்ட கொடுஞ்சினமும் என்றாவது படிப்படியாய் மாறியே போகும் என்ற உலகவியல் காட்டியது.

அன்பு அவள்பால் ஊறும்–என்றது, சினம்மாறி, அன்பும் சிறிது சிறிதாகத் தோன்றும் என்றபடி. ஊறும் என்றது சிறிது சிறிதாகத் தோன்றுவதை.

முன்னைக் கனிவிருக்கும்–என்றது அதன்பின் அவள் உள்ளத்தில் கனிவும் பிறக்கும் என்பான் வேண்டி. கனிவு பேதைமையாற் பட்ட இரக்கம். அன்பின் முதிர்ந்த ஒன்று.

என்றோ–என்று எண்ணியோ?

இப்பாடல் அடுத்த உவகை இயலுக்கு எடுப்பாகும்.





## 7· உவகை

கண்டாள்; கனிந்தாள்; கழன்ருள்நாண்; காதற்றேன்
உண்டாள்; உவந்தாள்; ஒருவனுளந் தன்னுளமாய்க்
கொண்டாள்; மணந்தாள்! குழல்! (1)

---

### 7. உவகை.

வேற்றூர் சென்று மணந்த மகள் பாலும், மகள் மணவாளன் பாலும் கொண்ட சினம் தணிதலும், தாய்மை காரணமாக இரக்கம் பூத்து, அன்பாகக் காய்த்து, அருளாகக் கனிந்து, உவகையாக இனித்த தென்க.

முற்கூறிய சினம் மாறிய பின்னே, அச்சினத்தால் தான் முனிந்து கூறியவற்றிற்குத் துணிவு கூறித் தன் அன்பிற்குக் காரணம் காட்டவேண்டி யிருப்பதால், தன் மகள் அவ்வாறு போய் மணந்தது குற்றமில்லை என்கின்ருள் என்க.

இவ்வியலின்கண் வந்துற்ற பாடல்கள் முன்னியலின் பாடல்களோடு பொருத்தி மகிழ்தற் குரியன.

1) 'மகள் தான் ஒருவனைக் கண்டதும் இயல்பே; அவன் அழகிலும், அன்பிலும் உளங்கனிந்ததும் இயல்பே;அதனுல் பிறரிடம் காட்ட வேண்டிய நாணமெனும் நற்பண்பைக் கைவிட்டதும் இயல்பே; அதன் விளைவால் அவனிடம் இளமை நலம் உண்டதும், உளம் உவந்ததும், பின் இருவரும் கூடி ஒருவர் உளம் பிறிதொருவர் உளமாய்க் கொண்டு, கலந்து, மணந்துகொண்ட செயல்களும் இயல்பே. இவற்றில் என்ன குற்றம்? என்று தன் சினத்திற்குத் தணிவு கூறினுள். இக்கூற்று, தான்கொண்ட அன்பினுலன்றி வேறு வகையாகக் கூறுதல் இயலாதாகலின் இஃது அன்போடு

காந்தளிளங் கையாளோர் கைபற்றிக் கோதுகுழல்
போந்தலையுஞ் செங்கழுத்திற் பூண்டாளோர் தாலியினி
ஏந்திழையாட் கேதிங் கிழிவு? (2)

அடிமகளே; வாயிங் ககிற்புகைநன் கூட்டு!
மடிமேற் குழல்கிடத்தி! மற்றீர்பேன் மாய்ப்பல்
முடிமேற் செருகிம் மலர். (3)

---

பொருந்தி உவகையோடுள்ளிட்டது. 'தீக்கை மலர்க்கையால் தேர்ந்தாயோ?' என்றும், 'மால் விழுந்தாய்' என்றும், பல வாருக முனிந்து கூறிய கூற்றுக்கெல்லாம் இது தணிவாதல் காண்க.

2) கோதுகுழல் போந்தலையும் செங்கழுத்து–கோதாநின்ற குழல் போய் அலைகின்ற செங்கழுத்து.

'தன் கையால் பிறன் கை பற்றிக் கொள்ளலும், கழுத்தில் தாலி ஏற்றுக் கொள்ளலுமே மண நிகழ்ச்சிகள் ஆகலின், இருவரும் அவ்வாறு செய்ததில் இழிவு இல்லை' என்கின்ருள். 'சீர் கொட்டி ஏற்ருயோ சிற்ருலி' என்று முனிந்தவள் அதற்குத் தணிவுகூறி முன்னுக்குப்பின் முரண்படப் பேசுதல் அன்பு பற்றியாம் என்க. பிழை பொறுத்தலினும் அதனை மறத்தலே சிறப்பென அறிஞர் கொண்டாராகையால், மகள் செய்த பிழையைப் பொறுத்துக் கொண்டவள், அதை மறுப்பான் வேண்டி. அது குற்றமில்லை என்று தணிகின்ருள். இவ்வாறு கொள்ளாது அது குற்றமெனக் கருதியிருந்தால், அதை மறத்தற் கியலா தென்னும் மனவியல் பற்றி இது கூறப்பட்டதாம்.

3) இனி, முன் நடந்த பிழை முழுதும் மறந்த தாய், தன் மகள் பாற் காட்டும் அன்புச்செயல்களைக் கீழ் வரும் பாடல்கள் உணர்த்தா நிற்கின்றன. அன்பின் கனிவு உவகை எனக் கொள்க.

மகளை விளித்து, அகிற்புகையைக் குழலுக்கு ஊட்டு என்றலும், மடிமேல்குழலைக் கிடத்து, யான் ஈர் பேன் களைவல் என்பதும் அவ்வாறு புனைந்த முடிமேல் இம் மலரைச் சூட்டிக் கொள் என்றலும், தாய் தன் மகளை அழகு செய்யப் புகந்த அன்பினைக் காட்டிற்ரும்.

முன்னைப்போ லில்லைநீ! முல்லைச் சிறுபல்லி!
அன்னைசொற் கேட்டீ! அசையுங் கொடியேய்க்கும்
பொன்னிடைதாங் காது புனல். (4)

தாயணி யிஃதெந் தனிமகளே! தாலியொடு
நீயணி; நுந்தைதன் நற்றாய் எனக்கீந்த
சேயணி யிஃதுன் செவிக்கு. (5)

மடிமேற் கிடத்தி மகனொருவன்! நுந்தை
மடிமேற் கிடத்தி மகளொருத்தி! மற்றைக்
குடிமேன் நடத்தி குடி. (6)

4) இது குடமெடுத்துப் புனல் கொள்ளப் புறப்படும் மகட்குத் தாய் கூறியது. முன்னைப்போலில்லை-என்றது நீ ஈண்டு மணமான நங்கை என்றலும், அதனால் நலிவு ஏற்காதே என்றலும் ஆம். அன்னைசொற் கேட்டி-என்றது நீ அன்னையின் சொல்லை முன் கேட்டிலை, ஈண்டாவது கேட்பாயாக என்றுநினைவு காட்டுவான் வேண்டி. இஃது அன்பால் இட்ட வேண்டுகோளாம்.

5) இஃது அவட்குத் தான் அணியாது வைத்திருந்த அணிமணிகள் பூணக் கொடுத்ததாம்.

தாயணி-என்தாய் எனக்குக்கொடுத்த அணி.

தாலியொடு நீயணி-என்றது, நீயாகவே ஏற்றுக்கொண்ட தாலியொடு, இதனையும்அணி; இஃது ஒன்றுவது நான் அணியச் சொல்லி, நீ அணிந்து கொண்டதாக விருக்கட்டும் என்று.குறிப் புக் காட்டியபடி. நுந்தைதன் நற்றாய்-தாய்தன் கணவன்தாய்.

தாய்க்கு மாமியும், மகட்குப்பாட்டியும் ஆம். தன்தாய் தனக்கு அணிந்ததும், தன் மாமி தனக்கு அணிந்ததும் தன்மகளை அணிந்துகொள் என்றாள்.

'முதலென்றேன் கீழ்க்கடையை' என்றுமுன் சினந்ததனால், தனக்குத்தன் முன்னோர்தந்த அணி மணிகளைத் தந்து தன் மகளுக்கு இழிவு துடைத்தாள் என்றபடி.

சேயணி-சிவந்த அணி

பாடியான் கேட்பல்! படிவக்கால் தூக்கி நீ
ஆடியான் பார்ப்பல் அழுகண்ணு மூக்குமாய்த்
தேடியான் பெற்ற திரு. (7)

உண்கண் இவண்வா! உனக்கிது! நீயருந்து!
கொண்கண் தனக்கிது; கொண்டுகொடு! பேரின்பம்
மண்கண் எனக்கில்லை மற்று! (8)

---

6) இது மகள் குடி நீளவேண்டு மென்றது; மணத்தின்போது தான்வாழ்த்த வாய்ப்பிழந்தாள் ஆகையான் ஈண்டு இதை வாழ்த்தாகக் கூறினுள் என்க.

மடிமேல் கிடத்தி மகன் ஒருவன்–என்றது தனக்குப் பெயரன் வேண்டும் என்பதையும், நுந்தை மடிமேல் கிடத்தி மகள் ஒருத்தி என்றது தன் கணவர்க்குப் பெயர்த்தி வேண்டும் என் பதையும் காட்டிற்று. இனி, தனக்கு மகள் ஒருத்தியே என்றும், மகன் இல்லையாதலால், தன் மகளுக்காவது முதலில் மகன் பிறக்கவேண்டும் என்றும் கருதி, முதலில் 'மடிமேல் கிடத்தி மகன்' என்ருள் என்க. மற இயலில் மணிவயிறு தாங்கும் மகன் என்றதும் நோக்குக.

7) பாடுயான்–பாடியான். 'நீ பாடுக, நான் கேட்பேன்' என்றும் 'நின் படிவக்கால்தூக்கி நீ ஆடுக; யான் பார்ப்பேன்' என்றும், தாய் தன் மகளைவேண்டினள் என்க.

'அழுகண்ணும் மூக்குமாய்த் தேடியான் பெற்ற திரு'–என்றது மகளை. மகள் தாயை விட்டுப் பிரிந்தபின் தாய் அவளைத் தேடி அழுதவாறு அலைந்தபின் அவள் காணப் பெற்ருள் என்னும் குறிப்புத் தோன்றக் கூறினள் என்க. திரு வென்றது மகளை. இழந்தசெல்வம் மீண்டதுபோல் அவள்வரப் பெற்ருள்என்பதாம்

8) உண்கண்–மை உண்ட கண். இங்கு ஆகு பெயராய் மகளைக் குறித்தது.

தன்மகளுக்கும் அவள் மணவாளனுக்கும் உண்ணக் கொடுத்து மகிழ்கின்ற அன்பை விளக்குவது இது.

கொடு கொண்டு–என்றதால் தன் மகள் முன்னே உண்டு,

அற்றைச் சிறுபேதை! அன்ஞன்தோள் பற்றிப்போய்
ஒற்றைத் தனிவழியில் ஊழ்த்தநாண் மீண்டும்
இற்றையெவண் பெற்ருள் இவள்? (9)

என்பால் ஒருகால் இவளுரைப்பாள்; உள்ளத்தே
தன்பால் அவன்கொண்ட தன்னேரில் அன்பெண்ணி
முன்போல் அவண்நிற்பாள் முன். (10)

---

பின்னை அவள் மணவாளனுக்குக் கொண்டுபோய்க் கொடுவென்றபடி.

9) இவ்வாறு கூறிய தாயிடம் நாணிய தன் மகளின் முன்னைத் திறம் காட்டித் தன்னுள்பேசி உவந்தது இது.

அற்றைச் சிறுபேதை-அன்று புறம்போன சிறு பேதைத் தன்மையள். பேதையினும் சிறுபேதை என்றது அறியாப்பேதை என்றதால்.

அவனுடைய தோளைப்பற்றிப் போன ஞான்றை ஒற்றைத் தனிவழியிலேயே வீழ்த்திவிட்ட நாணத்தை மீண்டும் எவ்வாறு பெற்ருள் இவள் என்பதாம்.

ஊழ்த்த நாண் மீண்டும்-என்றதால் முன்னிருந்து வீழ்த்தி மீண்டும் பெற்ருள் என்றபடி. இதுதன் மகளும், தானும் முன்போல் இருந்த நிலையுற்றனர் என்பது குறிக்கக் கூறிய தென்க. தன்மகளை, வெட்டிப் பேசியவள் ஈண்டு ஒட்டிப்பேசுவாளாயினள் ஆக, இஃது அன்பைக் கூறியது.

10) தன் மகள் தனக்கு ஒருசொல் சொல்லி, மறு நொடி அவள் கணவன் முன் நிற்பாள் என்று, அவனுக்கும் அவளுக்கும் உள்ள அன்பினைத் தன் அன்புள்ளத்தால் வியந்து கூறியது. என்பால் உரைப்பள்......அவன் கொண்ட அன்பு எண்ணி அவன்முன் நிற்பள் என்றது, தான் காட்டும் அன்பினுல் தன்பாலும், அதே போல் அவன் காட்டும் அன்பினுல் அவன்பாலும் மாறி மாறிப் பேசி மகிழ்வடைகின்ருள் என்று கருதியபடி. இது தன் மருகனையும் நினைந்து அவன் அன்பையும், வியந்தவாறு என்க. இஃது அடுத்த நகை இயலுக்குச் சார்பாக அமைந்தது.



## 8. நகை.

அள்ளியணே; கள்வாய் அருந்தத்தா! என்றுனும்.
கொள்ளே நகைப்பான கூத்தாம்! அவள்வளர்க்குங்
கிள்ளே மொழிந்த கதை. (1)

எட்டி;கோ தாயிவண்வா! இன்மலரை நின்குழலிற்
சூட்டிக்கோ வென்றேனு; சுட்டிப்பெண் பெற்றவன்பால்
நீட்டிச் சூ டென்றுள்முன் நின்று. (2)

### 8. நகை.

மகளும், அவள் மணவாளனும் தனிப்பட நடத்தும் நிகழ்வைப் பொதுப்பட நிகழ்த்தித், தானும் மற்றுரும் நகைத்து மகிழ்தலும் நகை எனலாயிற்று.

1) தன் மகளுக்கொரு மணவாளன் கிடைத்த பின்றைத் தன்னெடு பேசி மகிழ வேறெரு நற்றுணே யின்றுகையால், மகள் வளர்க்கும் கிளியோடு உரையாடி உவக்கும் தாய்க்குக் கிளி யுரைத்ததைப் பொதுப்படக் கூறி நகைக்கின்றுள்.

மகளும் அவள் கணவனும் ஒரு புறத் துரைத்ததைக் கேட்டிருந்த கிளி, அவர் பேசிய பேச்சுகளேப் புறஞ்சாற்றுகின்றதைக் கூறுவதாமிது.

அவள் வளர்க்கும் கிள்ளே என்றதால், தான் வளர்க்கும் மகள் செய்த கூத்தினே, அவள் வளர்க்கும் கிள்ளேயே புலப்படுத்தியதெனக் கொள்க.

அள்ளி அணேத்துக்கொள் என்றதும், கள்ஊறும்வாயினே அருந்துதற்குக் கொடு வென்றதும், தனிப்பட நிகழ்ந்த நிகழ்வுகள். கூறுவது கூறும் கிள்ளே, ஆதலின் அவ்வாறு கூறிற்றெனக.

2) எட்டி-எடி. வலித்தது.

பட்டாடை கட்டிப் படுத்தாளே; கொண்கன்றான்
கட்டாடை கட்டிமறு காலைவந்தாள்! வந்தானே
சிட்டாடை கட்டிச் சிறந்து! (3)

கார்குழலிற் கொண்கன் கணையாழி உட்புகவும்
ஈர்கலைய முன்விழவும் யானகைக்கக் கேட்டதனை
ஊர்சிரித்த தன்றை, உவந்து! (4)

---

'ஏடி! கோதைப் பெண்ணே, இங்கு வா, இன் மலரை நின் குழலில் சூட்டிக்கொள்' என்று கூற: அவள் அம்மலரை வாங்கிக் கொண்டு சென்று, தன் கணவன் முன் நின்று, நீட்டிச் சூடென்று சொன்னாள்' என்பதாம்.

மலரைச் சூடுதற்கு விளித்தாளாகையால், கோதை என்றாள். கோதை–குழல். ஈண்டு ஆகு பெயராய் மகளைக் குறித்தது. சுட்டிப் பெண்–துடுக்குத்தனமுள்ள பெண்.

குழலில் மலர் சூட்டுதல் முதலிய காதல் நிகழ்வுகள், தனிப்பட நடவாது, தன் முன்னேயே நடந்தது நகை தோன்றுவதற்குக் காரண மென்க.

3) மகளும், அவள் கணவனும் முன்னிரவு உறங்கி, மறுநாள் காலை எழுந்து வந்தக்கால் ஒருவர் உடையை ஒருவர் கட்டி வந்தனர் என்பதாம்.

கொண்கன்தான் கட்டு ஆடை–கணவன் கட்டுகின்ற ஆடை.

சிட்டாடை–சிறு பெண்கள் அணியும் மேலாடை. சிற்றாடை என்பது எதுகை பற்றிச் சிட்டாடை என்று வந்தது.

முன் காலையில் எழுந்த அவளுக்கு, இருட்காரணமாக ஆடை மாறியதும், பின் காலையில் அவன் எழுந்து வந்த விரைவு காரணமாக ஆடை மாறியதும் இயல்பே என்க.

4) இரவில் அவன் குழலை வருடல் முதலிய காரணம்பற்றி அவனுடைய கணையாழி குழலுட் புகுந்ததும் தாய் ஈர்களைந்த ஞான்றை அவள் முன் விழுந்ததும், இரா நிகழ்ச்சியை வெளிப் படுத்தின வாதலின், ஈண்டு நகை தோன்றியதாம்.

கீரனென்ருன்; இல்லையவள் கிள்ளையென்ருள்; இல்லையில்லை
பாரதென்ருன்; என்னென்றேன்; பாவைபெறும் பிள்ளைக்குப்
பேரதென்ருள், யான்பெற்ற பெண்! (5)

கடுத்த திடையென்ருள்; காய்சுக்கு நீரைக்
கொடுத்துக் குடியென்றேன்; கொண்கனுக்கும் என்ருள்
படுத்து நகைத்தார் பலர். (6)

"தீதுசெயல் நன்ரேசொல் தீங்கிளியே;' என்ருளுக்
கேதுசெய்தேன் கிள்ளை''யென்ருன்! என்னென்றேன்; ஊடலெனக்
காதருகிற் சொன்னுள் கதை. (7)

---

ஊர்சிரித்தது அன்றை உவந்து-என்றது இந்நிகழ்ச்சியைக் கண்டோரும், கேட்டோரும் நகைத்து மகிழ்ந்தனர் என்பதாம். தன் மகளும், தன் மருகனும் கொண்டாடும் நல்லுறவு பற்றி, அவள் மகிழ்ந்து பலரிடமும் உரைப்பாளாகையான் ஊர் சிரிக்கக் காரணமாயிற்ரும். யானகைக்கக் கேட்டு என்றது யான், அதை நினைத்துநினைத்து நகைக்க, பலரும் அந்த நகையின் காரணம் கேட்டு நகைத்தனர் என்பதாம்.

5) பிறவாப் பிள்ளைக்குப் பெயர் வைக்கப் போராடியது கண்டு தாய் நகைத்தது. பிள்ளை பெறுமுன் பெயர் கருதிப் போராடல் அவர் பேதைமையைக் காட்டிற்று.

6) மகளுக்கு இடை கடுத்தது கண்டு, சுக்குநீர் தந்து, குடி என்னலும், அவள் தனக்குக் கிடைக்கும் பொருளைத் தன் கணவனுக்கும் உண்ணத் தந்து, பிறகருந்தும் பழக்கமாக, அந்தச் சுக்கு நீர் அவனுக்கும் வேண்டும் என்றது கேட்டுத் தாய் நகைத்தாள் என்பதாம்.

படுத்து நகைத்தார் பலர்-என்றது மகள் நலங்காண வந்த பலரும் விழுந்து விழுந்து நகைத்தனர் என்றதாம்.

7) இது மகளுக்கும், மருகனுக்கும் நடந்த சிறு பிணக்குக் குறித்துக் கூறுவதாகும்.

பிணக்கு வந்துற்றமையால், ஒருவர்க்கொருவர் நேர்முகமாய் மொழியாது, வீட்டிலுள்ள கிள்ளையை முன்னிலைப் படுத்திக்

மகளொடு துஞ்சும்! மகளொடெழும்! நாளும்
மகளொடு கொஞ்சும்; மகநோய்க்கு நோகும்;
மகள்தேர்ந் தெடுத்த மகன். (8)

நிறைச்சூலந் நாளவளோ நீட்டிக் கிடந்த
அறைத்தாழ் மருங்கில் அவள்நோக நொந்தென்
பிறைபெறப்பெற் ருன்மகிழ்வு பின். (9)

---

கூறினர் என்றலும், அதுபற்றித் தாய் கேட்க, அவள் காதருகில் தங்களுக்கிருக்கும் ஊடலைச் சொன்னுள் என்பதுமாம்.

கிளியை முன்வைத்து மொழிதலும், காதருகில் வந்து சொன்னதும் நகையாயிற்று.

கதை-என்றது ஊடல் நிகழ்ந்த காரண, கருமத்தையாம்.

8) மகள் தேர்ந்தெடுத்த மகன்-என்றது, பெற்ருேர் தேராது மகளே தேர்ந்த கணவன் என்றவாறு.

அவளொடு ஒன்ருகத் துஞ்சுவதும், ஒன்ருகவே எழுவதும், கொஞ்சுவதும், பற்றித் தனக்கேற்ற கணவனையே தேர்ந்தெடுத்துக் கொண்டாள் எனும் பெருமையொடு நகைத்ததாம் எனக் கொள்க.

தன் மகளையே சுற்றிக் கிடக்கும் மருகன்பால், தோன்றும் நகைப்பு என்க.

மகள் நோய்க்கு நோகும்-என்றது, மகளுக்குவந்த நோயைத் தனக்கு வந்ததாகக் கருதி வருந்துவான் என்றபடி. இனி மக நோய் என்றே கொண்டு கருவுற்றக்கால் நேர்கின்ற நோ வகை என்றும், அதற்காகத் தானும் கருவுற்ருன் போல வருந்துவான் என்றும் கொள்க.

9) நிறைச் சூல் அந்நாள்-பிள்ளைப் பேற்று நாளன்று.

நீட்டிக்கிடந்த அறை-பிள்ளைப் பேற்றின் பொருட்டு அவளை நீட்டிக் கிடத்திய அறை.

அறைத்தாழ் மருங்கில்-அறைக் கதவின் அருகில்,

கலைபெற்ற சீரைக் கவின்மகவை வாங்கித்
தலைநுகர்ந்தான் தன்பால் தளிர்க்கொடி, உங்கட்
கிலையினி யென்ருள் இடம்! (10)

---

பிள்ளைப் பேற்றன்று, மகளைக் கிடத்தி வைத்த அறையின் கதவிற்கருகில், வெளிப்புறமாய் அமர்ந்து, உட்புறம் அவள் நோக, இவனும் நொந்து, அவள் ஒரு மகவைப் பெற, இவனும் மகிழ்வைப் பெற்ருன் என்பதாம்.

அவள் நோக நொந்து–என்றது, செயலொன்றியது காட்டு வான் வேண்டி.

என்பிறை பெறப் பெற்ருன் மகிழ்வு–என்றது பயனும் ஒன்றி யது எனல் வேண்டி.

என் பிறை–பிறை போன்ற நெற்றியை உடைய என் பெண், அவள் உடல் நொந்து மகவைப் பெற்ருள் என்றலும், இவன் அவள் நோகநொந்து மகிழ்வைப் பெற்ருன் எற்றலுமாம். இவ னும் நொந்து பெற்ருன்–என்பது நகையாம்.

10) கலைபெற்ற சீர்–கலையழகு நிரப்பிய தன் மகள் பெற்றெடுத்த செல்வமாகிய குழந்தை.

'குழந்தையை எடுத்துத் தன் கணவன் தலை நுகர்தல் கண்டு மகிழ்ந்த அவள், உங்கட்கு இனி என்னருகில் இடமில்லை' என் ருள் என்க.

தளிர்க்கொடி–பேற்ருல் வருந்திக் கொடிபோல் துவண்ட பெண். தன் மகள் பால் சுற்றித் திரிந்த மருகன் அவள் மக வீன்ற காரணம் பற்றி இனி அருகில் இடமில்லை என்றதும், அதனுல் அவன் வருந்துதலும், நகைப்பை விளைத்த தென்க.

தன் மகளின் பிள்ளைப் பருவத்திலிருந்து, பேற்றுப் பருவம் வரை தாய்கண்ட சுவை நலன்கள் போலவே, தன் மகளும் தன் பிள்ளையிடம் தொடர்ந்து; காண்பாளாகையால் குழந்தைப் பேற் ருேடு நகையும், எண்சுவையும் முற்றின வென்க. 0

## தென்மொழியின் புதிய தனித்தமிழ் வெளியீடுகள்.

துரை-மாணிக்கம்
(பெருஞ்சித்திரன்)

அவர்களின்

### புது முறை இலக்கியங்கள்

1, எண்சுவை எண்பது 1—50

2. பாவியக்கொத்து 2—50

3. ஐயை (மறுபதிப்பு அச்சில்) 1—00

4. கொய்யாக்கனி—(மறுபதிப்பு அச்சில்) 3—50

5. பள்ளிப் பறவைகள் (குழந்தைப் பாடல்கள்) (அச்சில்)

4. மகபுகுவஞ்சி (அச்சில்)

5. அறுபருவத்திருக்கூத்து (அச்சில்)

6. கனிச்சாறு (அச்சில்)

7. கற்பனை ஊற்றுக் கட்டுரைகள் I- (அச்சில்)

பிற விளக்கங்களுக்கு,

தென்மொழி கடலூர்-1. தமிழகம்,

தனித்தமிழ்த் தாளிகைகள் தமிழ்ச்சிட்டு
தென்மொழி படியுங்கள்.